

# சிவப்புக் கோடு

சி.சிறீரங்கன்

# சிவப்புக்கோடு

சி.சிறீறங்கன்

ஜீவநதி வெளியீடு

சிவப்புக் கோடு (சிறுகதைகள்)/ சி.சிறீறங்கள் /கற்புலம் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்/ முதற்பதிப்பு: கார்த்திகை 2019/ ©சி.சிறீறங்கன்/ அட்டைப்பட வடிவமைப்பு: க.பரணீதரன் / வெளியீடு: ஜீவநதி, கலைஅகம், அல்வாய் / பக்கம்: 84/விலை: 300.00/அச்சுப்பதிப்பு: பரணீ அச்சகம், நெல்லியடி.

Sivapukkodu (a collection of Short Stories) / S.Srirangan/ Katpulam Lane, Urumpirai East, Urumpirai/ First Edition: November 2019/ ©S.Srirangan/ Cover Designed by K.Bharaneetharan/ Published by Jeevanathy, Kalai aham, Alvai / Pages: 84/Price: 300.00/ Printed at Baranee Printers, Nelliady.

ISBN: 978-955-0958-19-1

ஜீவநதி வெளியீடு - 130

அரிய இந்த மானிடப் பிறப்பைத் தந்து என்னை ஆளாக்கிய

எனதருமை அப்பா

அரியரத்தினம் சிவகுருநாதன்

எனதருமை அம்மா

சிவகுருநாதன் பரமேஸ்வரி

ஆகியோருக்கு

இந்நூல் சமர்ப்பணம்

## நன்றிகள்

திரு. க. பரணீதரன்
திருமதி சி.இராஜினிதேவி
திருமதி சு.இராஜமனோகரி
திரு ச. வேலழகன்
திரு சி.சிறிகாந்தன்
திரு சி.சிறீதரன்
திரு சி.சிறிகுமார்
திருமதி சி.சியாமளா
திருமதி சதீஸ் பிரேமா
வலம்புரி பத்திரிகை
உரும்பிராய் செம்பாடுகள் வட்சப் குழு

## உள்ளே...


- சிவப்புக் கோடு
- கனவு மெய்ப்பட வேண்டும்
- நீறுபூத்த நெருப்பாய்
- வலி தாங்கும் இதயம்
- மனிதத்தைத் தேடி...
- மாறாத வடுக்கள்
- கல்வியே எங்கள் மூலதனம்
- கல்லாதது உலகளவு
- வாழ்க்கை வாழ்வதற்கே
- புரிதல்
- தக்கணப் பிழைக்கும்
- விட்டில் பூச்சிகள்

# வாழ்த்துரை

ஈழத்தமிழரின் வரலாறு எதிர்கால சந்ததிக்கு எடுத்துச் சொல்லப்பட வேண்டும் எனில் அது எழுத்துருவாக்கம் செய்யப்பட வேண்டும். அவலம் நிறைந்த வரலாறு செவிவழி கடத்தினால் மட்டும் போதாது அது நிலையற்றது. தற்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய பதின்ம வயதிற்கு மேற்பட்ட அனேக தமிழ் மகனும் துயரம் தோய்ந்த வழி கடந்து வந்தவர்களே.

அக்கதைகளைக் கூறுவோர்கள் மறைந்த பின்னர் சம்பவங்கள் பிற்சந்ததியினர் அறியாத ஒன்றாகிவிடும். எனவே தான் அவை எதிர்காலத்தினருக்கு எழுத்துருவில் கடத்தப்பட வேண்டிய அவசியம் உணரப்படுகிறது.

கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்கள் நிம்மதியற்ற வாழ்வில் சிக்குண்ட தமிழ் மக்கள் காலத்திற்கு காலம் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இனங்களுக்கிடையே குரோத உணர்வை வளர்த்து அதிலே குளிர்காயும் ஒரு சாராரின் கைங்காரியத்தில் தமிழினம் தொடர்ந்து இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றது. இன்னல்களின் வடிவங்கள் மாறினும் தொடர்ந்து பாதிப்பை அனுபவிக்கும் இனமாக எமது தமிழினம் காணப்படுகிறது.

பெருமைமிக்க தமிழர் வாழ்வியலையும், கல்வியையும், பொருளாதாரத்தையும் திட்டமிட்டு சீரழிக்க முயலும் கயவர்களுக்கு கோடாலிக் காம்புகளாக எம்மினத்தில் சிலர் உடந்தையாக இன்றுவரை விளங்குகின்றனர்.

இவ்வாறான சூழ்நிலையை எதிர்நீச்சல் போட்டு வெற்றி கொள்ள எமது இளைய சமூகத்தைத் தயார்படுத்தும் உயரிய செயற்பாட்டிற்கு அனைவரும் உர மூட்ட வேண்டும். எமது

கடந்தகால சம்பவங்கள் நிகழ்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்லவும், அந்த அனுபவங்களளைக் கற்றறிந்து எதிர் காலத்தை சுபீட்சமானதாக மாற்ற இளைய சமூகத்தைத் தயார்ப்படுத்தவும் சம்பவங்கள் அச்சுருவாக்கம் செய்யப்பட வேண்டும்.

அத்தகையதொரு மேம்பட்ட பணியினையாற்ற எம்மில் சிலரே முயற்சியெடுக்கின்றனர். அத்தகைய சிலரில் இந்நூலாசிரியரையும் எடுத்துக் கொள்ளலாம்.

பலரில் தேங்கியிருக்கும் சம்பவங்கள் வரலாறாக்கப்படுவதில்லை. முயற்சிப்பதுமில்லை. இந்நூலில் குறிப்பிடப்படும் 12 கதைகளும் கற்பனையாக கருத முடியாத சம்பவங்களே கடந்த கால அவலங்கள் யுத்தம் எனும் கொடிய நிகழ்வில் பல்லாயிரங்களில் சில சம்பவங்களாகவே இவற்றை கருத முடியும், இது போன்ற யுத்த அவலத்தைச் சந்தித்த பலர் இன்றும் சமூகத்தில் நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அத்துடன் மனச்சாட்சியற்ற மனிதர்களுள் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதங்கள் படும் அவலங்களும் சம்பவங்களாகச் சித்திரிக்கும் நூலாசிரியர் பாராட்டுக்குரியவர்.

எதிர்கால சந்ததிக்கு ஓர் படிப்பினையைக் காவிச் செல்லும் அதி உன்னத காவியாக தனது நூலை வடிவமைத்துள்ளார். வாசிப்பு பழக்கம் அருகி வரும் நிலையில் அதனை ஊக்குவிக்கும் தலையாய கடமையும் ஆசிரியர்கட்கு இருப்பதால் ஒரு ஆசிரியரே அத்துறைக்கு உரமூட்ட விழைந்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கதொன்றாகும். ஏற்கனவே எழுத்துலகில் பாராட்டுக்களைப் பெற்ற நூலாசிரியர் திரு சிவகுருநாதன் சிறீறங்கனின் எழுத்து பணி எதிர்காலத்தில் இளையோரிடத்தில் மாற்றம் ஒன்றை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. அவர் தம் பணியைப் பேருவகையுடன் பாராட்டுகின்றேன்.

திரு சண்.வேலழகன்
அதிபர்
யா/கிறிஸ்தவக் கல்லூரி.

# வாழ்த்துரை

நவீன மயத்துள் புகுந்து விட்ட மனிதனிடம் இலக்கிய இரசனை இம்மியும் இல்லை என்றே கூறும் அளவில் இருக்கிறது நிலை.

ஒரு இலக்கிய நிகழ்விற்கு கூடும் கூட்டம் அதைப் பறைசாற்றி நிற்கிறது.

தற்கால நவீன மனிதனிடம் வாசிப்பு பழக்கம் அறவே அற்றுப் போய்விட்டது என்றே கூறவேண்டும்.

தமிழ்நாட்டில் இருந்து வெளிவரும் வாராந்த இதழான ஜூனியர் விகடன் இதழில் சிறுகதை என்பதைத் தாண்டி ஒரு பக்கக்கதை. இதையும் தாண்டி 10 செக்கன் கதைகள் வெளி வருவது நவீனத்தின் போக்கில் இலக்கியங்களும் அடிபடுகிறது எனபதற்குச் சிறந்த உதாரணமாகும்.

ஒரு காலத்தில் இலக்கியத்தின் வளர்ச்சி உச்சம் பெற்ற எம்மிடம் இலக்கியம் பற்றிப் பேசுவதையே வெறும் விடய மாகப் பார்க்கும் அளவில் வந்து நிற்கின்றோம். என்பது வருத்தத்திற்குரிய விடயமாகும்.

சி.சிறீறங்கனின் "சிவப்புக்கோடு" சிறுகதைத் தொகுதி வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்வடைகின்றேன்.

"சிவப்புக்கோடு" சிறுகதையில் வெளிவரும் அநேக கதைகள் வலம்புரி சங்குநாதம் பகுதியில் பிரசுரமானவை.

சிறீறங்கனின் சிறுகதைகள் சாதாரண சிறுகதைகளில் இருந்து சற்று வேறுபட்டுக் காணப்படும் தன்மையை நான் அவதானித்திருக்கிறேன்.

அநேகம் கதை கூறும் பாணியில் அமையும் அவரின் படைப்புகளின் பாத்தரங்கள் யதார்த்தத்தில் நம் சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களைப் படம் போட்டுக் காட்ட

வல்லது. அதனை அவரது படைப்புக்களைப் படிக்கும் போது புலப்படும்.

இத்தொகுப்பின் பெயர் "சிவப்புக்கோடு" முதலாவது படைப்பும் "சிவப்புக்கோடு" பாடசாலைகளில் சிவப்புக்கோடு அடிப்பதற்கு முன் கையொப்பம் இடப்பட வேண்டும் என தவியாய்த் தவிக்கும் ஒரு ஆசிரியரின் மனநிலையையும் அவர் எதிர் கொண்ட சூழலையும் மிகத் தத்ரூபமாகப் படைத் திருக்கிறார். சிவப்புக்கோடு சிறுகதைத் தொகுதி வெளிவந்து வெற்றியடைய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**மாவை நா.கஜேந்திரன்**
**முகாமையாளர்**
**வலம்புரிநாளிதழ்**

# வாழ்த்துரை

நாவல், சிறுகதை, கவிதை என்பன இலக்கியப் பெறுமானத்தை உச்சநிலைக்கு கொண்டு செல்கின்ற மூன்று விடயங்களாகும். தன்னை உணரவும், தன்னை வெளிப்படுத்தவும் மனிதன் பிறப்பித்த கலை மனித மனதை வாழ்வைச் செழுமைப்படுத்தும் உயர்ந்த நோக்கம் கொண்டது. அனுபவம் என்பது வாழ்வின் தன்மையை உணர்த்துகின்ற தீவிர குணம் கொண்ட நுண்தளம். இத்தளத்தின் விரிவு உச்சமாக வெளிப்படும் பொழுது தான் கலைத்துவம் சிறக்கும். வாழ்வைச் செழுமைப்படுத்தும் கலைத்தூண்டலே சமூகப் பிரக்ஞையாக மேற்கிளம்பும்.

மனித உறவுகளில் ஏற்படுத்தும் சிக்கல்கள் வலிகள், துன்பங்கள் என படைப்பின் உள்ளீட்டுப் பொறிகளாக இயங்குகின்றன. மனித வாழ்நிலைப் பரப்பின் அனுபவத்தை ஆழப்படுத்துகின்றன. தன்சூழலில் இடம்பெறம் சம்பவங்கள் ஒரு படைப்பாளியின் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும் போது அது கலை வடிவமாகப் பிரசவமாகின்றது. பொதுவாகப் பல படைப்பாளிகள் யதார்த்தப் பாங்கான கதைகளையே படைக்கின்றனர். இந்த வகையில் இளம் படைப்பாளியான சிறீறங்கன் அவர்களின் சிறுகதைகளும் யதார்த்த நெறி நின்று இயங்குபவையாகவே உள்ளன.

வளர்ந்து வரும் படைப்பாளியான இவரின் மனித உறவுகள் குறித்ததான பார்வை நெகிழ்ச்சியானது. அவரது மொழிக் கையாட்சி வாசகனுக்கு இலகுவாக விளங்கிக் கொள்ளக் கூடியது. வடபுலத்து மக்களின் வாழ்வியலைப் பாதித்த போரின் வலியைப் பிரதிபலிக்கும் மாறாத வடுக்கள், பெண்களின் கையறுநிலையையும் அதனால் ஏற்படும் அவலத்தையும்

வெளிப்படுத்தும் விட்டில் பூச்சிகள், போதைப்பொருள் பாவனையால் மாணவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை வெளிப் படுத்தும் கல்வியே எங்கள் மூலதனம் போன்ற சிறுகதைகள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவை.

எமது கல்லூரியின் ஆசிரியராக அறிமுகமாகிய அவரின் தன்னடக்கமும், துறைசார் புலமையும் தன்னிடம் வழங்கப்படும் பொறுப்புகளை மிகச்சிறப்பாக நிறைவேற்றும் ஆளுமையும் என்னைக் கவனம் பெற வைத்தன. இலக்கியத் துறையில் ஆவர்வம் கொண்ட அவரது படைப்பு முயற்சி தொடர வேண்டும். யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றி வரும் இவர் பல்வேறு தேசிய கலை இலக்கியப் போட்டிகளிலும் பங்கு பற்றிப் பரிசில்கள் பெற்றுள்ளார். வளர்ந்து வரும் இளம் படைப்பாளியான ஆசிரியர் சிறீறங்கன் அவர்கள் தொடர்ந்தும் சிறுகதைத் தொகுதிகளை வெளியிட வாழ்த்துகின்றேன்.

**இராஜினிதேவி சிவலிங்கம்**
**உடுவில்**

# முன்னுரை

சமூகத்தில் நடைபெறும் பல்வேறு விடயங்களைக் கருப்பொருளாகக் கொண்டு இலக்கியங்கள் தோற்றம் பெறுகின்றன. குறிப்பாக கவிதை, சிறுகதை போன்ற நவீன இலக்கியங்களில் இவற்றின் செல்வாக்கை அதிகம் காணலாம். சந்தம், ஓசை, குறியீடு போன்றவற்றைக் கொண்டு கவிதைகள் படைக்கப்படுகின்றன. அவ்வாறே உள்ளக்கிடக்கைகளையும், சமூகப் பிறழ்வுகளையும் நெருக்கடிகளையும் வெளிக் கொண்டு வருவதற்குச் சிறுகதைகள் பெரிதும் உதவுகின்றன. வெளிப்படையாகச் சொல்ல முடியாத செய்திகளைக் கதைகள் மூலம் சொல்வதற்கு உதவும் சீறுகதைகள், பாமர மக்களால் கூடப் படித்து புரிந்து கொள்வதற்கு உதவுகின்றன. இவ்வகையில் ஆசிரியராகப் பணிபுரியும் சி.சிறீறங்கன் அவர்களால் எழுதப் பட்ட "சிவப்புக்கோடு" என்னும் இச்சிறுகதைத்தொகுதி அமைகின்றது.

சிவப்புக்கோடு முதல் விட்டில் பூச்சிகள் ஈறாகப் பன்னிரண்டு சிறுகதைகள் அடங்கிய இத்தொகுதி பல்வேறு கால சூழ்நிலைகளில் நாம் பட்ட இடர்பாடுகளையும் சவால்களையும் சுட்டிக்காட்டுவது மட்டுமன்றி அவை எவ்வாறு எதிர் கொள்ளப் பட்டன; சமாளிக்கப்பட்டன என்பதனையும் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. இத்தொகுதியானது திரு. சிறீறங்கன் அவர்களுக்கு சமூகத்தின் மீதுள்ள அக்கறையை எடுத்துக் காட்டுவதுடன் அவரது எழுத்தாற்றலையும் கற்பனை உணர்வையும் புலப்படுத்தி நிற்கின்றது. இதிலுள்ள பன்னிரண்டு கதைகளில் பத்துக் கதைகள் அவ்வப்போது வலம்புரி சங்குநாதத்தில் பிரசுரமானவை. பத்திரிகையூடாக அறிமுகமாகிய சிறீறங்கன் அவர்கள் இப்பொழுது "சிவப்புக்கோடு" என்னும் இத்தொகுதியூடாக ஓர்

சிறுகதை எழுத்தாளனாக எம் சமூகத்தில் அறிமுகமாகின்றார்.

இவரது இந்நன்முயற்சியைப் பாராட்டுவதுடன் தொடர்ந்தும் இது போன்று பல தொகுதிகளை வெளியிட வேண்டும் என வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

**கலாநிதி தி.வேல்நம்பி**
**சிரேஷ்ட பேராசிரியர்**
**பீடாதிபதி**
**முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

# என்னுரை

"எங்கெல்லாம் அநீதி நிகழ்கின்றதோ அங்கெல்லாம் நான் அவதரிப்பேன்" என பகவத்கீதையில் பகவான் ஸ்ரீவிஷ்ணு கூறியது போல் அநீதியைக் காணும் போதெல்லாம் அது என்னை எழுதத் தூண்டுகின்றது. இராமருக்கு உதவிய சிறு அணிலைப் போல் நானும் இந்த சமூகத்தை சீர்படுத்த முயற்சிக்கின்றேன். அதனால் நானும் என்னையே சீர்படுத்திக் கொள்கின்றேன். என் மனதில் ஏற்படும் காயங்களுக்கு எல்லாம் இந்த எழுத்தின் மூலம் ஒத்தடம் இட்டுக் கொள்கின்றேன்.

இந்தப்போட்டி உலகில் வலியன வாழ்கின்றன. நலிவடைந்தவை செத்து மடிகின்றன. அதிகார பலத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி குறித்த ஓர் தொழில் சமூகம் தப்பிப் பிழைப்பதும் மற்றையது நசுக்கப்படுவதும் கண்கூடு.

சேவைக்காலம் முழுவதும் வீட்டிற்குள் அருகிலேயே கழிக்க வேண்டும் என அடம்பிடிக்கும் அரச ஊழியர் மத்தியில் யுத்த காலத்தில் வன்னிக்குச் சென்று வந்த அரச ஊழியர் பட்ட அவஸ்தையை கோடிட்டுக் காட்டவே "சிவப்புக்கோடு" எனும் என் முதற் சிறுகதையை நான் எழுதினேன். இதுவே என் சிறுகதைத் தொகுதியின் தலைப்பாகவும் இட்டுக் கொண்டேன்.

ஒவ்வொரு சிறுகதையையும் நான் படைக்கும் போதும் இளம்தாய் ஒன்றின் முதற்பிரசம் போல் புழகாங்கிதம் அடைகின்றேன்.

மற்றும் என்னை இனங்கண்டு என்னை மேலும் எழுதத் தூண்டிய, மாவட்ட ரீதியில் பரிசில்கள் பெற வைத்த முனைநாள் கோப்பாய் கிறஸ்தவ கல்லூரியின் உப அதிபர் திருமதி சி.இராஜினிதேவி, ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி அ.இராஜ மனோகரி அவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றி பாராட்டு

கின்றேன். மற்றும் எனது சிறுகதைத் தொகுப்பிற்கு நூல்வடிவம் கொடுத்து அழகான அட்டைப்படத்துடன் உங்கள் கைகளில் தவழ வைத்த ஜீவநதி ஆசிரியர் திரு க. பரணீதரன் அவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றிகூறக் கடமைப்படுகின்றேன்.

மற்றும் எனது பெரும்பாலான சிறுகதைகள் வலம்புரி பத்திரிகையில் பிரசுரமானவை. அந்த வகையில் வலம்புரி பத்திரிகைக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனது சிறுகதையின் கதாபாத்திரங்கள் ஒன்றும் கற்பனையல்ல. அவர்கள் எங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டு இருப்பவர்கள்.

“சிவப்புக்கோடு” நிச்சயம் உங்கள் இதயத்தைத் தொட்டுச் செல்லும் என நான் நம்புகின்றேன். உங்களது ஆக்கபூர்வமான கருத்தக்களும் விமர்சனங்களும் பாராட்டுக்களும் என் அடுத்த சிறுகதைத் தொகுதி வெளிவர உந்துசக்தியாக அமையும் எனக் கருதுகின்றேன்.

அன்பான வாசகர்களே, எனது சிறுகதைத்தொகுதி தொடர்பான ஆக்கபூர்வமான விமர்சனங்கள் மற்றும் பாராட்டு கள் எனது இலக்கிய பயணத்தை மேலும் வலுப்படுத்த உதவும், எனவே எனது மின்னஞ்சல் முகவரியில் Srirangan75@gmail.com அல்லது கைத்தொலைபேசியில் 0779232592க்கு தொடர்பு கொள்ளுங்கள்.

சி.சிறீரங்கன்
உரும்பிராய்.

# சிவப்புக்கோடு

பெரும் இடியோசை போன்ற அந்த சத்தத்தினால் துள்ளியெழுந்து கட்டில் நுனியில் அமர்ந்தேன்... ஊ... ஊ... என்ற பேரிரைச் சலுடன் விண்ணைக் கிழித்துக் கொண்டு மூன்று எறிகணைகள் எங்கள் வீட்டின் மேலாக பறந்து சென்றன.

"சண்டை தொடங்கீற்றுது" என மனைவி படுத்திருந்தபடி குரல் கொடுத்தாள். மீண்டும் எறிகணைகள் அதேபோல் பறந்து சென்றன. ஓடிச்சென்று வாசல்க்கதவைத் திறந்தேன்.

"எங்கே போகிறது என்று பார்ப்பம்" என்று கூறி முற்றத்திற்கு வந்தேன். மனைவியும் என் பின்னே வந்திருந்தாள். கிழக்குப் பக்கமாக வெளிச்சங்கள் தென்பட்டன. அவை பராலைற் வெளிச்சங்கள். "முகமாலை" என நான் முணு முணுத்தேன்.

"சண்டை தொடங்கிற்று, நீங்கள் பள்ளிக்கூடம் போகத் தேவையில்லை" என்றாள் என் மனைவி. அவள் குரலில் குதூகலம் தெரிந்தது.

நான்கு மனிக்கு வைத்த அலாரம் அடித்தது. "குழந்தை" என்று ஓடிசென்றாள் மனைவி . சிறிது நேரத்தில் உலகமே அமைதியானது போல் இருந்தது.

"ஸ்கூலுக்குப் போக வேண்டும்" என மனைவியிடம் கூறினேன். சமையல் வேலைகளில் அவள் இறங்க, பாட ஆயத்த வேலைகளில் நான் மூழ்கிப் போனேன். 5.40 மணியளவில் நான் வேலைக்குப் போகத்தயாரானனேன். அடையாள அட்டை, பேர்ஸ் என்பவற்றைக் கவனமாகப் பொக்கற்றில் வைத்தேன்.

சாப்பாடு, தண்ணீர் எல்லாம் என் மனைவி என் பாக்கில் வைத்தாள். புறப்படத் தயராவதற்கும் முன் அறைக்குச் சென்று என் செல்ல மகனை முத்தமிடக்குனிந்தேன். நித்திரையாய் இருக்கும் குழந்தையைக் கொஞ்சுக்கூடாது என என் அம்மா தடுத்தார். அதில் எனக்கு உடன்பாடில்லை. குனிந்து அவன் முகத்தைப் பார்த்தேன். நித்திரையில் உதட்டோரம் புன் சிரிப்பு சுழித்து நின்றது. குழந்தைகளாய் நாமும் மாறினால் எவ்வளவு நல்லது என ஒரு கணம் எண்ணத் தோன்றியது.

நான் எனது மோட்டார் சைக்கிளை கைதடி மலாயன் கபே கடைக்குப் பின்னால் விட வேண்டும். அதற்குப் பின் 6 மணிக்கு வரும் முகமாலை செல்லும் பஸ்ஸை பிடிக்க வேண்டும். இது என் வழமையான விடயம். சீரான சராசரி வேகத்தில் என் மோட்டார் சைக்கிள் முன்னோக்கி ஓட என் மனமோ பின்னோக்கி ஓடிக் கொண்டிருந்தது.

இரண்டு நாட்களுக்கு முன்புதான் உரும்பிராய் மருதனார் மட றோட்டில் வைத்து ஒருவரைச் சுட்டிருக்கிறார்கள். புலிகளின் இரு கிளைமோர் தாக்குதல் அடுத்தடுத்து நடந்த பிற்பாடு இவ்வாறான சூடு பரவலாக நடக்கத்தொடங்கியுள்ளது. எவரைச் சுடுகின்றனர், ஏன் சுடுகின்றனர் எனத் தெரியவில்லை. பயப் பீதியுடன் வைத்திருக்க அவர்கள் விரும்புவதாக யாரோ சொல்லக் கேட்டிருக்கின்றேன்.

கோப்பாய்ச்சந்தி வர வேகத்தைக் குறைத்து கடக்க முற்பட்டேன். மறுகரையில் நின்ற ஆமிக்காரன் என்னை மறித்து இறங்கி வரச் சொல்லுகிறான். அவன் முகத்தில் பதற்றம் இருந்தது.

"எங்க போறது" கொச்சைத் தமிழில் அவன்

"கிளிநொச்சி... ரீச்சர்..." இது நான்.

"ஜொப் ஐசியை தாங்க"

"புதுசு இன்னமும் தரேல"

புலிகள் தந்த அடையாள அட்டையில் ஆசிரியர் என போட்டிருக்கு. ஆனால் அதனை ஒளித்து வைத்திருந்தேன்.

"சரி போங்க போங்க" என பக்கத்தில் நின்றவன் பச்சைக் கொடி காட்டினான். அவன் என்னை அடிக்கடி பார்த்திருப்பான்.

மெல்ல வெளிக்கிட்டு கோப்பாய் வெளியில் போய்க் கொண்டிருந்தேன். கண்ணுக்கெட்டின தூரம் யாரும் இல்லை. மெல்ல மெல்ல நிலம் வெளுத்துக் கொண்டிருந்தது. என்னமோ என் மனம் பயந்து கொண்டிருந்தது. மோட்டார் சைக்கிள் கண்ணாடியை அவதானித்த போது தூரத்தில் ஓர் மோட்டார் சைக்கிள் வருவது தெரிந்தது. முதுகு கூசியது. கடவுளை அவசரமாக துணைக்கு கூப்பிட்டேன். என் பிள்ளையின் முகம் கண் முன் வந்தது.

மோட்டார் சைக்கிள் மிக அருகில் வந்து விட்டது. அவர்கள் “சேர் நாங்கள் போறம் நீங்கள் வாங்க” என கத்தியபடி சென்றார்கள். எனக்குத் தைரியம் பிறந்தது. நானும் அவர்களைப் பின்தொடரந்து வேகமாகச் சென்றேன். அவர்கள் மடுவில் கற்பிக்கும் ஆசிரியர்கள்.பின்னால் அவர்களது உடுப்பு பைகளுடன் காற்றடிக்கும் பம்பினையும் கொண்டு சென்றார்கள். திங்கள் போய் வெள்ளி வருவார்கள்.

கைதடி வந்தது. நான் அவர்களுக்கு கையசைத்து விடை கொடுத்தேன். மோட்டார் சைக்கிளை உரிய இடத்தில் விட்டு பஸ் தரிப்பிடத்திற்கு ஓடி வந்தேன். நேரம் 5.55 ஐக்காட்டியது. சிறிது நேரத்தில் இ.போ.ச.பஸ் ஒன்ற வந்த போது அதில் தொற்றிக் கொண்டேன்.

கொடிகாமத்தில் பஸ் நின்றது. மற்றவர்கள் இறங்க வழிவிட்டு நின்றேன். எல்லோரும் இறங்கினார்கள். “சேர் இறங்குங்கோ. முகமாலை போகாது” என்று அந்த சேர் என் தோள்ளில் தட்டினார். இறங்கினோம். கொடிகாமம் பஸ் ஸ்ராண்ட் சனத்தால் நிரம்பியிருந்தது. பருத்தித்துறையில் இருந்து அல்லது யாழ்ப்பாணத்திலிருந்து வரும் பிறிதொரு பஸ்ஸில் இனி ஏற வேண்டும். நிற்கும் சனத்தைப் பார்த்தால் போட்டி போட்டுத்தான் ஏற வேண்டும்.

யாழ்ப்பாணப் பக்கமாக இருந்து தனியார் வான் ஒன்று வந்து நின்றது. வரும்போதே சனத்தை அள்ளிப்போட்டு ஒரு பக்கம் சரிந்த வண்ணம் வந்து நின்றது. கன்டெக்ரர் பெடியன் “வாங்கோ இடம் இருக்கு, வாங்கோ இடம் இருக்கு” என்று கத்தினான்.தொங்கிக்கொண்டு வந்தவர்கள் பிறர் ஏற இடம்

விட்டு இறங்கினர். நாம் ஏறாது உருத்திரபுரம் செல்லும் பெண் ஆசிரியர் இருவரை ஒருவாறு ஏற்றிவிட்டோம். கீழே நின்றவர்கள் மீண்டும் தொற்றிக் கொண்டனர். கால் வைக்கக் கூட இடம்இல்லை. கன்டெக்ரர் பெடியன் "அண்ணை ரைட்" என்று சொல்லி விரல் நுனியில் தொங்கியபடி போனான். ஏறாத எம்மீது கரும் புகையைக் கக்கி கோபத்தைத் தீர்த்துப் போனது அந்த வான். சில நிமிடத்தில் பருத்தித்துறை பஸ் ஒன்று வந்தது. அதைப் பிடித்து முகமாலைக்கு ஒருவாறு வந்து சேர்ந்தோம். பஸ் நிற்க முதல் சிலர் ஓட்ட வீரர்கள் போல் பாய்ந்து ஓடினர். பெண்களும் நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என எம்முன் ஓடினர். இது ஆமியின் செக் பொயின்ட். பெண்கள் வரிசையும், ஆண்கள் வரிசையும் தனித்தனியே நீண்டு காணப்பட்டது. நீண்ட மலைப்பாம்பு போல் மெல்லமெல்ல நகர்ந்தது.

"ஏது இண்டைக்கு மெனக்கெடுத்திறான்" என முன்னால் நின்றவர் முணுமுணுத்தார்.

"விடியப் புறம் சினேப்பர் அடித்து மூன்று முடிஞ்சுதாம். அம்புலன்ஸில கொண்டு போனவங்கள்" என்று இன்னொருவர்.

விடிகாலையில் எறிகணைத் தாக்குதலின் அர்த்தம் எனக்குப் புரிந்தது.

புலிகளைச் சோதனை செய்யும் இடம் வெறிச்சோடிக் கிடந்தது. புலிப் போராளிகள் அங்கே பதிந்து தான் போக வேண்டும்.

நான் செக் பொயின்டுக்கள் நுழைந்ததும் என் பாக்கை சோதனை செய்தான் ஒருவன். பின் மற்றையவன் உச்சந்தலையில் இருந்து உள்ளங்கால்வரை தடவிப்பார்த்தான். அருவருப்பாய் இருந்தது.

நான் வெளியில் வந்து காவல் இருந்தேன். பஸ் இன்னும் சோதனை முடிந்து வரவில்லை. நான்காவதாக பின்னால் நின்றது. முன் வந்த பஸ்ஸில் தொற்றிக் கொண்டேன். பக்கத்தில் தான் புலிகளின் பொயின்ற். மாறி ஏறலாம்.

புலிகளின் பொயின்றுக்குள்ளும் ஓட்டம்தான். அங்கேயும் பல வரிசைகள், அரச உத்தியோகத்தர்கள், வியாபாரத்திற்கு வன்னி செல்பவர்கள், வன்னி தாண்டி கொழும்புக்கு செல்பவர்கள், வன்னியில் நிரந்தரமாக வசிப்பவர்கள் என பல வரிசைகள். நான் ஓடிச் சென்று அரச உத்தியோகத்தர் வரிசையில் நின்றேன்.

எங்கள் அடையாள அட்டைகளை வாங்கிக் கொண்டு டோக்கன்இலக்கம் ஒன்று தந்தார்கள். இப்போ அது தான் என் உயிர். என் பேர்சில் மிகப் பாதுகாப்பாக பக்குவமாக அதை வைத்தேன். வரும் போது அதைக் கொடுத்தால் தான் நான் வீடு செல்லலாம். என் சக ஆசிரியர் ஒருவர் அதைத் தொலைத்து கனக புரத்தில் உள்ள பாஸ் அலுவலகம் சென்று அவஸ்தைப்பட்டது எனக்குத் தெரியும்.

நான் ஒருவாறு பஸ்ஸில் ஏறிக் கொண்டேன். ஒரே வியர்வை வியர்த்து ஒழுகியது. வாகனம் ஓடத் தொடங்கி காற்று கொஞ்சம் வந்தது. உயிர் வந்தது போல் இருந்தது. எனினும் என் உடம்பு சான்ட்விச் போல் நசுங்கிக் கிடந்தது. பளை வந்ததும் பஸ்ஸில் இருந்து கொஞ்சப்பேர் இறங்கிக் கொண்டனர். வான் தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தது. முன்னால் போன வாகனம் ஒன்று மேடு பள்ளம் நிறைந்த அந்த றோட்டில் புழுதியை வாரி இறைத்துச் சென்றது. வாகனத்தில் புரட்சிகரமான பாடல் ஒன்று போய்க் கொண்டிருந்தது. "ஓடு ஓடு ஓடு நீ ஓய்ந்து விட்டால் வரும் கேடு" என்னமோ எனக்கு அப்பாடல் பொருந்துவதாகப் பட்டது. பரந்தன் வந்தது. அங்கும் பலர் இறங்கினர்.

"செந்திரேசா சேர் முன்னுக்கு வாங்கோ" எனக் கன்டெக்ரர் அழைத்தான். அடுத்த இறக்கம் என்னுடையது. நேரத்தைப் பார்த்தேன். எட்டு மணி. இறக்கம் வந்துதம் இறங்கி ஓட்டமும் நடையுமாக விரைந்தேன். தலை குழம்பி உடுப்புக் கசங்கி இருந்தது. தலையைத் தடவி விட்டுக் கொண்டேன். செம்மண் புழுதி கைகளில் படிந்தது. கால் துவண்டு, உடம்பு களைத்திருந்தது. ஆனால் மனம் சோரவில்லை.

பாடசாலை மைதானத்தில் செந்திரேசா மாணவிகள் செம்பகப் பறவைகள் போல் காலைப் பிரார்த்தனைக்கு அணிவகுத்து நின்றனர். விரைந்து அலுவலகத்தை அடைந்து வரவுப் பதிவேட்டினை அணுகினேன். பேனாவைக் கையில் எடுத்து கையெழுத்திடப் போனேன். அங்கே சிவப்புக் கோடு எனைப் பார்த்துச் சிரித்தது. உடல் துவண்டு போனது. உள்ளம் வலியெடுத்து "ஓ" என அழுதது.

– வலம்புரி சங்குநாதம் 25.09.2016

# கனவு மெய்ப்படவேண்டும்

கற்பக விநாயகர் கோயில் மணி அடித்து ஓய்ந்தது. பின்னேர பூசைக்கான ஆயத்த மணி அது. மத்தியான சாப்பாட்டை முடித்து குட்டித் தூக்கத்தில் இருந்த கமலா திடுக்குற்று எழுந்தாள்.

"அதுக்குள்ள நாலு மணி ஆயிற்று. நேரம் போற போக்கு" என்று தனக்குத் தானே சொல்லியபடி கூந்தலை அள்ளி முடிந்தவளாய் வெளியில் வந்து பார்த்தாள். மழைக்கான அறிகுறி வானத்தில் தென்பட்டது. திரட்சியான கறுத்த மேகக் கூட்டங்கள் ஓரணியாகச் சேர்ந்து கொண்டிருந்தன. மெல்லிய குளிர்காற்று உடலை வருடிச் சென்றது. ஒருகணம் உடலைச் சிலிர்த்துக் கொண்ட கமலா "மழை வரப் போகுது" என்று சொல்லியவாறு வீதிக்கு இறங்கினாள். ஓட்டமும் நடையுமாய் அருகில் இருந்த தோட்ட வெளிக்குச் சென்றாள்.

பூமிப்பந்தின் மேல் பச்சைக் கம்பளம் விரித்தது போல் எங்கும் பசுமையாய் இருந்தது. ஆங்காங்கே சில மாடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அங்கே அவளைப் பார்த்ததும் "அம்பா" என்று கத்தியது அந்தச் செங்காரி. பதிலுக்கு "ம்பா" என்று கத்தியது அதன் கன்று.

"என்ன மேய்ஞ்சது காணாதோ" என்று கேட்டபடி இரண்டையும் அவிழ்த்து வீட்டிற்கு கொண்டு வந்தாள் கமலா.

ஆம், கமலாவின் குடும்பம் பெண் தலைமைத்துவக் குடும்பம். இவளது கணவனும் வன்னி யுத்தத்தில் காணாமல் போனவன்தான். நிர்க்கதியாய் நின்ற இவள் குடும்பத்திற்கு

வெளிநாட்டு உறவுகள் சிலர் நல்ல இன மாடும் கன்றும் பெற்றுக் கொடுத்திருந்தனர். அதுதான் இவள் வாழ்வாதாரம்.

மாட்டையும் கன்றையும் அதன் சிறிய கொட்டகையில் கட்டியவள் தவிட்டினைக் கரைத்து வைத்தாள், பின்னர் பாலைக் கறந்து பால் வாளியில் ஊற்றி வெளி வராந்தாவில் வைத்தாள். சிறிது நேரத்தில் ஐயா ஒருவர் வந்து அப்பாலை தனது பெரிய பால் வாளியில் ஊற்றி எடுத்துச் சென்றார். அவர் வீடுகளுக்குப்போய் பால் வியாபாரம் செய்பவர்.

“பிள்ள முடிஞ்ச இந்த மாத பால் கணக்கைப் பார்த்து வை. நாளைக்கு கணக்கு முடிப்பன்” என்று கூறிச் சென்றார்.

மனக்கணக்குப் போட்டவாறு குசினிக்குள் தேநீர் போடச் சென்றாள் கமலா. காலை ஐந்து லீற்றர், மாலை மூன்று லீற்றர். முப்பது நாளுக்கும் இருநூற்று நாற்பது லீற்றர். லீற்றர் எண்பதுப்படி இம்மாதம் பத்தொன்பதாயிரத்து இருநூறு ரூபா. இதுதான் இவள் மாத வருமானம்.

தேநீரைக் குடித்தவாறு வெளிவாசல், தூணோடு அமர்ந்திருந்தாள். பிள்ளையார் கோயில் பூசைக்கான மணி ஒலித்துக் கொண்டிருந்தது. “பிள்ளையாரப்பா” என்று மனதிற்குள் வேண்டிக் கொண்டாள்.

கமலாவின் கணவன் கண்ணன். “மிகவும் கெட்டிக்காரன். உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா பட்டம் பெற்றவன்! தமிழீழவைப்பகத்தில் மேலாளராகப் பணி புரிந்தவன். கடைசிவரை வைப்பகத்தின் சொத்துக்களைப் பாதுகாப்பதில் அரும்பாடு பட்டவன்.

இறுதி யுத்தத்தில் வைப்பகத்தின் சொத்துக்கள் கள வாடப்பட்ட போது இவனும் இவள் கண் முன்னே களவாடப் பட்டான். இன்றுவரை கண்ணில் படவில்லை. இவளும் அனைத்து இடங்களுக்கும் சென்று பார்த்து வந்தாள். இருந்த சொற்ப நகைகளையும் தொலைத்ததுதான் மிச்சம். பயன் ஏதுமில்லை

“அம்மா...” என்று கூப்பிடுவது கேட்டு பழைய நினைவு களில் இருந்து விடுபட்டவள் அரனும் அகிலும் ஓடி வருவதைக் கண்டாள். அரன் தரம் எட்டில் கல்வி கற்பவன். அகில் தரம் ஐந்து

புலமைப் பரிசில் சோதனை எழுதிவிட்டு பெறுபேற்றுக்காக காத்திருப்பவன்.

அயல் வீட்டுச் சிறுவர்களுடன் விளையாடி விட்டு வரும் அவர்கள் வேர்த்துக் களைத்திருந்தனர்.

"தேத்தண்ணி போட்டு வைச்சிருக்கன். போய் குடியுங்கோ" என்றாள் தாய்.

"அம்மா ஸ்கொலாசிப் றிசல்ட் இரவுக்கு வருதாம் என்றான் மூத்தவன்.

"அப்படியா" என்று பதகளிப்புடன் எழுந்த தாய், "பிள்ளையாரப்பா என்ர பிள்ளை ஸ்கொலர்சிப் பாஸ் பண்ணிட னும்" என்று வேண்டிக் கொண்டாள். பின் அகிலை அணைத்த வாறு "நீ நல்லாச் செய்தாய் தானே" என்றாள்.

"எத்தனை முறைதான் கேட்பீங்க?" என்று சலித்தவாறு தேநீர் குடிக்க ஓடினான் அகில்.

இரவு எட்டு மணி இருக்கும். பக்கத்து வீட்டு பாக்கியம் மாமி, "என்னடி கமலா, கேள்விப்பட்டனியே? இண்டைக்கு ஸ்காலர்சிப் றிசல்ட் வருதாம். உன் மகன் பாஸ் பண்ணுவானே" என்று கேட்டவாறு முற்றத்தில் போட்டிருந்த கதிரையில் வந்து அமர்ந்தாள்.

என்ன புதினம் என்றாலும் பாக்கியம் மாமிக்கு தெரிந்து விடும். ஊர்க்குருவி என்ற பட்டப்பெயரும் இருக்கு. மாமிக்கு புதினம் அறிவதில் அலாதிப் பிரியும்.

"ஓம் ஓம் வாங்கோ மாமி!" என்று வரவேற்றாள் கமலா.

"என்னடா நீ பாஸ் பண்ணுவியா?" என்று அகிலைப் பார்த்துக் கேட்டா பாக்கியம் மாமி. புத்தகம் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்த அகில் "ஏன் பாட்டி பாஸ் பண்ணாட்டித்தான் என்னவாம்?" என்று கோபத்துடன் கேட்டான்.

பாக்கியம் மாமியின் கேள்வி அவனுக்குப் பிடிக்கவே யில்லை. எத்தனை பேருக்குத்தான் பதில் சொல்வது.

"என்னடி உன்ர மகன் உப்படிக் கதைக்கிறான்" எனக் குறைப்பட்டாள் பாக்கியம் மாமி.

"தம்பி" என்று அதட்டினாள் கமலா.

"பின்ன என்னம்மா இந்த உலகத்தில உள்ள பெரியவர்கள்

எல்லாம் ஸ்கொலர்சிப் பாஸ் பண்ணியே வந்தவர்கள்" என்று தன் புத்திக்கு எட்டியவாறு கேட்டான் அகில்.

அவன் கேட்ட கேள்வி கமலாவிற்கு மட்டுமல்ல பாக்கியம் மாமிக்கும் ஒரு பெரிய கேள்விக்குறியை ஏற்படுத்தியது.

"உனக்கு இந்த ஊர்ப்பள்ளிக்கூடம்தான் சரி" என்று கூறி சாபமிட்டதுபோல் விருட்டென்று எழுந்து சென்றாள் பாக்கியம் மாமி.

ஆம், உண்மைதான். இந்த ஸ்கொலர்சிப் சோதனை எத்தனை பேருக்குச் சோதனையாய் அமைகின்றது. இது ஒரு சமூக நோய் போல் எல்லோரையும் பீடித்து வருகின்றது. உயர்ந்த, தாழ்ந்த சமூகம் என்று இல்லாமல் தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற இனபேதம் இல்லாமல் அனைவரையும் பிடித்து வரும் ஒரு நோயாக உருவெடுத்து வருகின்றது. பிள்ளைகள் மட்டுமன்றி பெற்றோரையும் உடல், உளத் தாக்கத்திற்கு உள்ளாக்குகின்றது. உதவிப் பணத்தொகை, விவசாய, வறிய குடும்பங்களுக்கு கிடைப்பது சிறிய அனுகூலமாக இருந்தபோதிலும் சித்தியடை யும் பெரும்பாலான மாணவர்கள் அரச உத்தியோகத்தர் பிள்ளைகளே, இதனால் விவசாய. வறிய குடும்ப மாணவர்கள் அல்லவா பாதிக்கப்படுகின்றனர்.

"அம்மா பசிக்குது" என்று பிள்ளைகள் கத்தியதைக் கேட்டு தன் யோசனையில் இருந்து விடுபட்டு எழுந்தாள் கமலா.

இரவுச் சாப்பாட்டை முடித்து மூவரும் பத்து மணியள வில் படுக்கைக்குத் தயாரானார்கள்.

"தம்பி போனை தலைமாட்டில் வைத்திரு. இரவு ரிசல்ட் வந்தால் யாராவது அடிப்பார்கள்" எனப் பெரியவனுக்குச் சொன்னாள் தாய்.

விடிந்து வெகு நேரமாகியிருக்கும். உடல் அசதியால் நல்ல தூக்கம். கமலா பிந்தி எழும்பியிருந்தாள். போன் அடித்துக் கொண்டிருந்தது. மறுமுனையில் உங்க மகன் 147 புள்ளி எடுத்திருக்கிறான். அவன் 8 புள்ளிகளால் சித்தியடையத் தவறி விட்டான் அவன்ர வகுப்பு ரீச்சர் அது. அவள் நெஞ்சைப் பாறாங்கல் கொண்டு அழுத்துவது போல் இருந்தது. மெல்ல

தூணைப் பிடித்தவாறு அமர்ந்தாள். என்ன செய்வேன். என் மகனை உயர்தரப் பாடசாலையில் எப்படிச் சேர்ப்பேன், ஸ்கொலர்சிப் உதவிப் பணம் அவன் படிப்பிற்கு உதவும் என்று எண்ணியிருந்தேனே! எண்ண ஓட்டங்கள் அவள் மனதை அலைக்கழித்தன.

ரீச்சர் இவன் வகுப்பில் கெட்டிக்காரன், என்று சொன்னாவே அப்போ ஏன் இப்படி? கண்களால் வழிந்த நீரைச் சட்டென்று துடைத்துக்கொண்டாள். யாரோ தொடுவது போன்ற உணர்வில் திரும்பிப் பார்த்தாள். பக்கத்தில் அகில் நின்று கொண்டிருந்தாள். இவள் முகத்தை உற்றுப் பார்த்தான். அவன் கண்களில் பல கேள்விகள் தொக்கி நின்றன. "ஆமய்யா! உனக்கு நல்ல மார்க்ஸ் *147*" ரீச்சர் சொன்னவா. எனக்கு இது போதுமய்யா. அகில் விருட்டென்று வெளியில் ஓடினான். இவளும் பின்னே "அகில்" என்று கத்திக் கொண்டு ஓடினாள். அகில் அந்தத் தோட்ட வெளியை நோக்கி ஓடினான். இவளும் பின்னே ஓடிக் கொண்டிருந்தாள். கண்கள் இருண்டன. மூச்சு முட்டியது. கால்கள் பின்னின. பின்னே பாக்கியம் மாமியும் வேறு யாரோ கத்துவது கேட்டது.

"அகில் வேண்டாம் ஓடாத நில்" என்று வீறிட்டுக் கத்தியவள் படுக்கையில் இருந்து பதறி எழுந்தாள்.

உடம்பு முழுவதும் நனைந்திருந்தது.

"சீ.... என்ன கனவு இது" இந்த ஸ்கொலர்சிப்சோதனை எத்தனை பேரை அல்லற்படுத்துகின்றது. சுவாமிப்படத் தட்டில் இருந்த திருநீற்றை அள்ளிப் பூசினாள்.

"கடவுளே! ஸ்கொலர்சிப் எடுத்த எல்லாப் பிள்ளைகளுக்கும் மனவலிமையைக் கொடு" என்று வேண்டிக் கொண்டாள்.

என்ன முடிவு என்றாலும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும் என்று மனதில் உறுதி பிறக்க போனை ஓப் செய்து விட்டு அகிலை அணைத்த வண்ணம் படுத்தாள். அவன் அப்போது ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான்.

விடிந்தது. போனில் அதிகளவு மிஸ்ட் கோல்கள். மசேச்சுகள் வேற. அகில் பாடசாலை மட்டத்தில் முதலாம்

மாணவனாக புலமைப்பரிசிலில் சித்தியடைந்து விட்டான். மகனின் உச்சந்தலையில் தாய் முத்தமிட்டாள். மகனோ அமைதி யாகத் இருந்தான். துள்ளிக் குதிக்கவில்லை. சந்தோசத்தை வெளிப்படுத்தவில்லை.

"என் நண்பர்கள் பலர் சித்தியடையத் தவறிவிட்டார்கள். எத்தனை மாணவர்கள் இப்போது கவலையோடு இருப்பார்கள்" தன் மனக்குறையைத் தாயிடம் வெளிப் படுத்தினான்.

சிறிது நேரத்தில் பாடசாலை அதிபர் அகிலை கைத்தொலைபேசியில் அழைத்தார், சிறிது நேர உரையாடலின் பின்,

"சேர் என் போட்டோவை பேப்பரில் போட வேண்டாம். பிளீஸ். சித்தியடையாத என் நண்பர்கள், என்னைப் போன்ற மாணவர்கள் கவலையில் இருப்பார்கள், அவர்கள் துன்பத்தில் நானும் பங்குகொள்கின்றேன்" என்று அகில் மிக உறுதிபடக் கூறினான். சிறுவயது என்றாலும் பொறுப்பான அவன் பேச்சைப் பார்த்து வியந்து நின்றாள் அந்தத் தாய்.

- வலம்புரி சங்கு நாதம் 22.10.2017

# நீறு பூத்த நெருப்பாய்...

மதுரா வேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்தினாள். பதினைந்து நிமிடங்களில் அவள் வீட்டை அண்மித்து விட்டாள். அவர்களது ஒழுங்கையில் பல்சர் மோட்டார் சைக்கிளில் இருவர் நின்றிருந்தனர். அவளை வழிமறித்தனர். அவளுக்கு அவர்கள் மீது சந்தேகம் ஏற்பட்டது. எச்சரிக்கை அடைந்தாள்.

"அக்கா இந்த முகவரியைச் சொல்ல முடியுமா?" எனப் பின்னால் இருந்தவன் இறங்கி வந்தான். மோட்டார் சைக்கிளால் இறங்கியவள் ஓரடி பின்னகர்ந்து முகவரியை வாங்கிப் பார்த்தாள். அக்கணப்பொழுதில் கழுத்தில் இருந்த அவள் சங்கிலியை அறுக்க அவன் முற்பட்டான். அவனது கைகளைத் தட்டியவள் அதே வேகத்தில் தனது தலைக்கவசத்தை அவன் முகத்தின் மீது வீசினாள். அத்தாக்குதலை எதிர்பாராதவன் தடுதாறித் தொப்பென்று கீழே விழுந்தான். அத்தருணத்தில் மதுரா "கள்ளன்... கள்ளன்..." என்று கத்தினாள். அவ்வளவு தான். அவர்கள் தப்பினோம் பிழைத்தோம் என்று ஓடி மறைந்தார்கள் சில நிமிடங்களில் ஊரே கூடி விட்டது. எல்லோரும் அவள் வீரத்தை பாராட்டினார்கள்.

அவள் வீடு போய்ச் சேர்ந்ததும் தாய் பதட்டத்துடன்

"ஏனம்மா நீ அடித்தாய்? பயமில்லையா? அவங்கள் திரும்பி வருவாங்களோ தெரியாது" என்று பயந்து நடுங்கினாள்.

"ஏனம்மா நீ பயப்படுகிறாய்? அவங்களுக்கு நான் சங்கிலியைக் கழற்றிக் கொடுக்கணுமோ?" சினத்தால் அவள் முகம் சிவந்தது.

"சோம்பேறி நாய்கள். பிறர் உழைப்பில் உடம்பு வளர்க்கும் தடிமாடுகள்" அவள் வார்த்தைகள் தெறித்தன.

"கை, கால்களை அலம்பி விட்டு வா பிள்ளை சாப்பிடுவம்" என தாய் மகளை ஆசுவாசப்படுத்த முற்பட்டாள்.

இவர்கள் இருக்கும் வீடு தாத்தா எழுதி வைத்த இவளுக்கான ஒரே சொத்து. நாற்சதுர வீடு அது. அம்மாவுக்காக மகளும், மகளுக்கு என அம்மாவும் இவர்களுக்காக அந்த வீடும் இதுதான் அவர்கள் வாழ்க்கை.

அம்மாவோ மகளுக்குத் தேடாத வரன் இல்லை. அம்மாவை விட்டுப் பிரிய மனமில்லாத மகள். தனக்கு ஏற்ற வரனை தானே தெரிவு செய்ய வேண்டும் என்று கதைத்து அதனால் குழம்பிப் போகும் சம்பந்தங்கள் "வாயாடிப் பெண்" என்ற முத்திரை வேறு. இன்று கோயில் பார்க்க இருந்த வரனை நாளை வரச் சொல்லி புரோக்கர் மூலம் தாய் சொல்லி விட்டாள்.

இன்று மகளுக்கு நடந்த அசம்பாவிதங்கள் அவளை அவ்வாறு சொல்ல வைத்து விட்டது. மதிய உணவை முடித்துக் கொண்ட பின் வழமை போல் மகள் அந்தப் பெரிய மாமரங் களின் கீழ் சாய்மனைக் கதிரை போட்டு அமர்ந்தாள். அவள் மடியில் மக்ஸீம் கார்க்கி என்ற சோவியத்து எழுத்தாளர் எழுதிய "தாய்" என்ற புத்தகத்தை வைத்திருந்தாள். மூன்றாவது முறையாக அதனை இப்போ அவள் வாசித்துக் கொண்டிருக்கின்றாள்.

***

அந்த பிரதேச செயலகத்தின் வரவேற்புப்பகுதியில் இருந்த தொலைபேசி மெல்லிதாக சிணுங்கிக் கொண்டது. உடனே அங்கு வரவேற்பாளியாக இருந்த பெண் ஒருத்தி எடுத்தாள். அழகான சிரிப்புடன் பதிலளித்தாள். பின் அதனை நிறுத்தாது ஓடி வந்தாள். நிதிப்பிரிவின் உள்ளே வந்து "மதுரா" என்று மெல்ல அழைத்தாள். கணணியில் தரவுகளை பதிவேற்றிக் கொண்டிருந்த மதுரா திடுக்கிட்டுத் திரும்பினாள். கைகளால் போன் என்று பாவனை செய்தாள். உடனே எழும்பிய மதுரா தடுமாறி இடறி விழப்போனாள். எனினும் சுதாரித்துக் கொண்டாள்.

"பார்த்துப் போம்மா" என சிரேஷ்ர பெண் ஊழியர் ஒருவர் அக்கறைப்பட்டார்.

மெல்லிய சிரிப்புடன் வரவேற்பு பகுதிக்கு வந்த மதுரா தனக்காக காத்திருந்த தொலைபேசியை எடுத்து காதில் வைத்துக்கொண்டாள்.

சிறிதுநேர உரையாடலின் பின் றிசீவரை வைத்துவிட்டு நிமிர்ந்தாள்.

"என்ன மதுரா. விஷேசமோ" என்றாள் வரவேற்பாளினி.

"ஓமக்கா. இது நாலாவது இடம். அம்மாதான் பாவம்" என்றாள் மதுரா.

"ஏன் இப்படி சலிப்பாய் கதைக்கிறாய்" என்று கடிந்தாள். வரவேற்பாளினி.

ஓர் விரக்தியான சிரிப்புடன் நிர்வாக உத்தியோகத்தர் அறைக்குச் சென்றாள் மதுரா.

அரை நாள் விடுப்பு பெற்று தன் மேசைக்கு வந்தவள். தன் கைப்பையில் இருந்த கைப்பேசியை எடுத்துப் பார்த்தாள். அது செயலற்றுக் கிடந்தது. அங்கு நின்ற நண்பி ஒருத்தியிடம் சொல்லிக்கொண்டு புறப்பட்டாள்.

மதுரா! பெயர் மட்டுமல்ல, அவளும் ஓர் அழகிதான். கலைப்பாட பட்டதாரியான அவள் கோப்பாய் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராக கடமை புரிகின்றாள். அவள் கடந்து வந்த பாதைகள் மிக மோசமான அனுபவங்களை அவளுக்கு கற்றுக்கொடுத்துள்ளது.

விஸ்வமடுப்பகுதியில் வசித்து வந்த அவர்கள் குடும்பம் முள்ளிவாய்க்கால் வரை இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்திற்கு வரும்போது தந்தையையும் அண்ணனையும் இழந்து வந்துள்ளனர்.

மதுரா தன் பிளசர் ரக மோட்டார் சைக்கிளினை எடுத்துக் கொண்டு வாசலுக்கு வந்தாள். வானத்தை அண்ணாந்து பார்த்தாள். கருமேகக் கூட்டங்களுடன் போராடித்தோற்ற சூரியபகவான் எங்கயோ ஒடி ஒழிந்து கொண்டார். துக்கம் முழுவதுமாக நெஞ்சை அடைக்க அழத்துடிக்கும் பெண்ணைப் போல் வானமும் அழுது தீர்க்க தயாராகிக் கொண்டிருந்தது.

கரு மேகக்கூட்டத்திற்கு கிழே நாரைக்கூட்டம் ஒன்று பறந்து சென்றது மிக அழகாக நேர்த்தியாக பறக்க அவைகளுக்கு

யார் கற்றுக் கொடுத்தது?

"சுதந்திரப்பறவைகள்" என முணுமுணுத்தாள்.

அவளும் வன்னியில் சுதந்திரப்பறவை தான். எவ்வளவு வீரம். எவ்வளவு நெஞ்சுறுதி. எவ்வளவு கனவுகள். அனைத்தும் இழந்து இப்போ நிர்க்கதியாய் அவள் நிற்கின்றாள்.

வருடம் ஒரு முறை என்று இவள் அண்ணன் வந்து போகும் போது இரவிரவாக எவ்வளவு விடயங்களை இருவரும் கதைத்திருப்பார்கள். எதிர்காலம் தொடர்பில் எவ்வளவு கனவு களைச் சுமந்திருந்தான் இவள் அண்ணன். யுத்தம் முடியும் தருவாயில் ஒரு முறை இவர்களது கூடாரத்திற்கு வந்தவன். "நீங்கள் புறப்படுங்கள் என்னைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்." என்று சொன்னவன் தான் இதுவரை எந்த தகவலும் இல்லை.

அம்மாவும் மகளும் போகாத கோயிலும் இல்லை தேடாதா இடமும் இல்லை.

அண்ணா நீ எங்கே இருக்கின்றாய்? இங்கு நடக்கும் கொடுமைகளைப் பார்த்தாயா? எந்த இனத்திற்காகப் போராடினீர்களோ அந்த இனம் தன்னால் தானே சீரழிக்கின்றது. நீங்கள் நிச்சயம் இதைப் பார்த்து வெட்கப்படுவீர்கள். வேதனை அடைவீர்கள். போதைவஸ்து, பாலியல் பலாத்காரம், வாள் வெட்டு, கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் என எம்மினமே எம்மீது கட்டவிழ்த்துவிட்ட அநீதிகளுக்காக போராட வேண்டும் அண்ணா. அந்நியனைக் குறை கூறிப் பயனில்லை. கைப்பொம்மைகளாக இருக்கும் எம்மவருக்கு மதி எங்கே? இது தான் இவள் மனக் குமுறல். எத்தனை இரவுகள் கண்ணீரில் கரைந்திருக்கும்.

ஐந்தே நிமிடங்களில் கோப்பாய் மத்தியில் உள்ள அவள் வசிக்கும் வீட்டை வந்தடைந்தாள். அவள் வந்திறங்கிய தும் முகமெல்லாம் சிரிப்பாக அவளின் தாய் குசினிக்குள் இருந்து எட்டிப்பார்த்தாள்.

"இரண்டு வாளி குளித்திட்டு வந்து நல்ல சாறியாகக் கட்டு பிள்ளை கோயிலுக்குப் போகனும்" என்று கெஞ்சலாய் தாய் சொன்னாள்.

அரைமணித்தியாலத்தில் செம்மஞ்சள் கலர் சாறியில் அழகுப்பொம்மையாக வந்து நின்றாள். அவள் சோடினைகள் எதுவும் செய்யவில்லை. செய்வதும் பிடிக்காது. அவளது இயற்கை அழகே அவளுக்கு போதும்.

"நீங்க வரல" அம்மாவைப்பார்த்துக்கேட்டாள்...

"இல்லை நீ போட்டு வா மாமா வருவான்" என்றாள் தாய்.

அப்பாவை இழந்த காரணத்தினால் என்னமோ நல்ல காரியங்களுக்கு போவதை தவிர்த்து வந்தா அவ தாய்.

"நீங்க முதல் வெளிக்கிடுங்க" என்றாள் மதுரா கோபம்பொங்க.

அவள் கண்களில் கோபத்தையும் சொல்லில் இருந்த அழுத்தத்தையும் புரிந்த தாய்.

"மூன்று பேர் நல்ல காரியத்திற்கு போகக்கூடாதம்மா" என்று சமாளிக்க முற்பட்டாள்.

"அம்மா உந்த மூட நம்பிக்கைகளை மூட்டை கட்டி வையுங்கோ."

சிறிது நேரத்தில் தாயும் மகளும் சோலையம்மன் வாசலில் நின்றனர். மாப்பிள்ளை வீட்டாரை இன்னும் காணவில்லை.

கால்களைக் கழுவிக் கொண்டு வா பிள்ளை உள்ள ஒருக்கா சுத்தி வருவம் என்றா அம்மா.

"நீங்க போங்க நான் கொஞ்ச நேரம் வெளியில் நிற்க போறன் என்றாள் மதுரா"

தாய் உள் நுழைந்ததும் வெளி மண்டபத்தில் அமர்ந்து கொண்டாள். அவள் மனது ஏனோ சங்கடப்பட்ட வண்ணம் இருந்தது. தன்னை ஆசுவாசப்படுத்த ஆழமாக மூச்சை இழுத்து விட்டாள். அதில் ஓர் சுகம் தெரிந்தது.

முள்ளிவாய்க்கால் பகுதியில் தனது அப்பாவை இழந்த பின் அவளிடம் கடவுள் நம்பிக்கை அறவே இல்லாமல் போய் இருந்தது. அப்பாவை பலியெடுத்த ஷெல் தான் இவளது அழகான கண் ஒன்றையும் பறித்தெடுத்தது. ஒற்றைக்கண் இருந் தாலும் அவளது வாழ்க்கை அன்றில் இருந்து இருண்டதாகவே இருந்தது.

சிறிது நேரத்தில் தாய் வெளியில் வந்து அவளது நெற்றியில் குங்குமத்தால் கீறிட்டாள். அப்பொழுது வான் ஒன்று கோயில் வளாகத்திற்குள் நுழைந்தது. அதனோடு பின்னால் மோட்டார் சைக்கிளில் அவளது மாமாவும் புரோக்கரும் வந்து கொண்டிருந்தனர். தாய் மகளை எழுப்பி வாசற் பகுதிக்குச் சென்றாள்.

“அம்மா நீ ஏன் பதட்டமாய் இருக்கின்றாய்” என்று கடிந்து கொண்டாள் மகள்.

சேலைத்தலைப்பால் தனது முகத்தைத் துடைத்துக் கொண்டாள் தாய்.

வானில் இருந்து அனைவரும் இறங்கினர். மாப்பிள்ளை வரவில்லையாக்கும் என மதுரா எண்ணிக்கொண்டாள். மூன்று பெண்களும் நான்கு ஆண்களும் வந்திருந்தனர். பெண்கள் வெளி நாட்டுக்கலாச்சாரத்தினை தம்முடன் போர்த்தபடி வந்திருந்தனர். அதில் ஒருத்தி யுவதி ஆண்களில் இருவர் வெளி நாட்டவர் அவர்களது வெயில் படாத தேகம் அவர்களைக் காட்டிக் கொடுத்தது. உயர்தர சென்ட்வாசனை வீசியது.

“நீங்க தான் மதுராவா?” என்றாள் அந்த யுவதி.

“ஓம்” என்றாள் மதுரா.

“நைஸ் நேம்”

“தாங் யூ”

“நீங்க யவ்னா யூனிவர்சிட்டியா”

“ஓம்”

“சண்டையிலா உங்கட கண்...” என்று இழுத்தாள் நாகரிக நங்கை.

“ இல்லை ஷெல் எங்கட ரெண்டுக்குள் விழுந்தது.”

“அது சரி மாப்பிள்ளை பெண்ணுடன் கொஞ்சம் கதைக் கட்டுமே” என்றார் புறோக்கர்.

மதுராவிற்கு தூக்கிவாரிப்போட்டது. மாப்பிள்ளையா? இங்கேயா? யாரது அவளுள் பல கேள்விகள் ஒரே நேரத்தில் மனதில் எழுந்தது.

“யார் மாப்பிள்ளை” என மதுராவின் தாயும் திகைப்பாக கேட்டாள்”?

"இவன் தான் சுகுமார். என் மூத்த மகன் என்ற அந்த வெளிநாட்டு அம்மா.

மதுரா அவனை உற்றுப்பார்த்தாள். வெயில் படாத அவனது தேகம். தொப்பை வயிறு. சராசரி உயரம். தடித்த கண்ணாடி கழுத்தில் பணத்திமிரை வெளிப்படுத்தும் கனத்த சங்கிலி.

"தொப்பை அப்பனை தொழ வினை அறுமே" என்று சிறு வயதில் பாடிய தேவாரம் நினைவு வர "களுக்" என்று சிரித்து விட்டாள் மதுரா.

அனைவருக்கும் அது தர்ம சங்கடத்தை ஏற்படுத்தியது. புரோக்கர் நிலைமையை சீராக்கும் வகையில் இருவரும் கொஞ்சம் கதைத்து வாங்கோ. அந்தக்குளக்கட்டுப்பக்கம் போய் வாங்கோ. என்று கோவில் கிழக்கு மூலையில் இருந்த குளத்தடிக்கு கட்டாயப்படுத்தி அனுப்பினார்.

இருவரும் போய் சிறிது நேரத்திற்குள் திரும்பினார்கள். மாப்பிள்ளையின் முகம் வேர்த்துக்கிடந்தது. மதுராவின் முகத்தில் ஓர் தெளிவு தெரிந்தது.

"நாங்கள் போய் முடிவினை அறிவிக்கின்றோம்" என மாப்பிள்ளை புரோக்கரிடம் கூறினார்.

எல்லோருமாக ஏறிச் சென்று விட்டனர்.

தாய் புரோக்கரை கடிந்து கொண்டாள். "என் பிள்ளையின் வயதுக்கும் அழகுக்கும் உதோ மாப்பிள்ளை."

"இஞ்சினியர் மாப்பிள்ளையல்லோ" என்றார் புறோக்கர். இதைக் கேட்டு மதுரா வாய்விட்டுச் சிரித்தாள். மூவரும் மதுராவை வியப்போடு பார்த்தவண்ணம் நின்றிருந்தனர்.

தாய் மதுராவைப்பார்த்துக் கேட்டாள்.

"அது சரி பிள்ளை நீ மாப்பிள்ளைக்கு என்ன சொன்னனீ"

மதுரா மீண்டும் கலகலவென்று சிரித்தாள்

தாய்க்கு கோபம் வந்தது.

"முதல்ல நீ சிரிக்கிறத நிப்பாட்டு என்ன நடந்தது சொல்" என்றார் தாய் கடுமையாக.

"அவங்கள் எல்லோரும் என்னைக் கேள்வி மேல் கேள்வி

கேட்டுத் துளைத்தாங்க. நான் மாப்பிள்ளையிடம் ஒரேயொரு கேள்வி மட்டும் கேட்டன். ஓடிப்போயிட்டாங்கள்." என்றாள். மதுரா.

"என்னடி அப்படிக்கேட்டுத்தொலைத்தாய்" என்றாள் தாய்.

"நீங்கள் எல்லோரும் என்னை கேள்வி கேட்கிறீங்கள். நான் உங்களை ஒரு கேள்வி கேட்கலாமா?" என்று கேட்டன்.

"கேளுங்க" என்றார் அவர்

"ஒரு ரூபா நாணயம் நிலத்தில் விழுந்தால் அதைக் குனிந்து உங்களால் எடுக்க முடியுமா ?" என்று கேட்டேன்.

அவ்வளவு தான் விறு விறு என்று வானில் ஏறிப் பறந்திட்டார் என்று கூறி விழுந்து விழுந்து சிரித்தாள் மதுரா. அவள் கேட்ட கேள்வி நகைச்சுவையானதாக இருந்தாலும் அதில் பல அர்த்தம் புதைந்திருந்ததை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

மதுரா சிரித்த வண்ணம் இருந்தாலும் அவளின் மனதின் மூலையில் நீறு பூத்த நெருப்பாய் எங்கோ வலி ஒன்று இருந்து கொண்டே இருந்தது.

– வலம்புரி – சங்குநாதம் 2017

# வலி தாங்கும் இதயம்

மாசி மாதத்து நள்ளிரவு. பனியோ மூசிப் பெய்த வண்ணம் இருந்தது. ஊரோ உறக்கத்தில் இருந்தது. ஆங்காங்கே நாய்கள் குரைப்பதும் பின் ஊளையிடுவதுமாக இருந்தன. அந்த ஊருக்கு தீய செய்தி ஒன்றைப் பறைசாற்றுவது போல் இருந்தது அந்த நாய்களின் ஊளை.

ஊரின் அந்தத் தெருமுனையில் இருந்த வீட்டில் மின்னொளி வெளிச்சம் யாரோ விழித்திருக்கிறார்கள் என்பதைப் பறைசாற்றியது. ஆம். அது உண்மை தான். அந்த வீட்டின் ஓர் அறையில் மூதாட்டி ஒருத்தி க்குகூ... க்குகூ... என்று இருமியவாறு படுத்திருந்தாள். எலும்புக்குப் போர்த்த போர்வை போன்றிருந்தது அவள் தேகம். ஒடுங்கிக் குடங்கி ஒருக்களித்தவாறு படுத்திருந்தாள். அவளால் சரிவர படுக்கமுடியகவில்லை. எண்பது வயதைத் தாண்டும் அவள் உடலில் உயிர் ஊசலாடிய வண்ணம் இருந்தது.

நொடிக்கொருதரம் தம்பி... தம்பி... என்று அழைத்த வண்ணம் இருந்தாள். மற்றைய அறை ஒன்றிலிருந்து "என்னம்மா உனக்குச் செய்யுது" எனக் கேட்டவாறு அவளது மகன் வந்து நின்றான். "கொஞ்சம் சுடுதண்ணி தாடாபுள்ள" என்று மூச்சிரைக்க கெஞ்சலாய்க் கேட்டாள் அந்தத் தாய். "இரணை வாறன்" என்றவன் தன் அறைக்குச் சென்று மனைவியை எழுப்ப மின் குமிழைப்போட்டான். "லைட்டை நிப்பாட்டுங்கோ" என்று சிடுசிடுத்தவாறு திரும்பிப் படுத்தாள் அவன் ஆசை மனைவி. மௌனியாக மின்குமிழை அணைத்து விட்டு குசினிக்குள்

வந்தான் அவன்.

சுடுதண்ணிப் போத்தலில் இருந்த சுடுநீரில் கோப்பியையும் சிறிதளவு சீனியையும் போட்டுக் கலக்கி தாயின் அறைக்கு எடுத்து வந்தான்.

மெல்ல அவளைப் பிடித்து உட்கார வைத்து கைகளைப் பிடித்துக் கோப்பியைக் கொடுத்தான்.

"சூடாக்குடியணை" என்று கனிவாய்க் கூறினான். விக்ஸ் டப்பா எடுத்து அதனை முதுகில் பூசிவிட்டான்.

"நான் இருக்கிறன் ஒன்றுக்கும் யோசிக்காதேயம்மா" என்று உறுதிபடக் கூறினான்.

தாயின் கண்கள் பனித்தன.

"நாளைக்கு உனக்கு வேலை. நீ போகனும். என்னைப் போர்த்துவிட்டு நீ போய்ப்படு" என்றாள் அந்தத்தாய் சுடு கோப்பிக்கும் விக்சுக்கும் அப்பால் அவனின் கனிவான சொற்கள் அவளுக்குக் கொஞ்சம் ஆறுதலாக இருந்தது.

வந்து படுத்தவனுக்கு நித்திரை வரவில்லை. அவன் மனமோ பழசை எல்லாம் அசைபோட்டுக் கொண்டிருந்தது. அருண் அந்தக் குடும்பத்தில் ஒரேயொரு ஆண்மகன். அவனுக்கு ஒரு அக்கா, அம்மா, அப்பா என அழகான சிறிய குடும்பம். அப்பா கொழும்பில் பலசரக்குக் கடை வைத்திருந்தார். அக்கா பிறந்து சரியாக பத்து ஆண்டுகளின் பின் இவன் பிறந்தான். குடும்பமே இவனில் உயிராய் இருந்தது. அவனுக்கு எட்டு வயதிருக்கும் போது 83 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரத்தில் கடையோடு அவன் ஆசை அப்பாவும் எரிந்து போனார். அந்த இழப்போடு யாழ்ப்பாணம் வந்தவர்கள் தான் இவர்கள். மாமாக்களின் ஒத்தாசையுடன் வாழ்ந்தார்கள். அவனது தாயோ தைக்கத் தெரிந்ததால் தையல் மெசினுடன் போராடி போராடி இவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெற வழி சமைத்தாள்.

இப்போ அவனது அக்கா தனியார் கம்பனி ஒன்றில் முகாமையாளராகப் பணி புரியும் ஒருதரைத் திருமணம் செய்து கொண்டு கொழும்பில் வசித்து வருகின்றாள், அருணோ தனியார் வங்கி ஒன்றில் உதவி முகாமையாளராகக் கடமை புரிகிறான். ஆசிரியராகக் கடமையாற்றும் சாளினியைக் காதலித்துக் கரம்

பிடித்தவன். அவன் ஆசைக்கு தாய் ஒரு போதும் தடையாய் நின்றதில்லை . உன் சந்தோசமே எனது சுவாசம் எனப் பச்சைக் கொடி காட்டிவிட்டாள். சாளினி ஏழை என்றாலும் சீதனம் வாங்குவதில்லை என்ற கொள்கைப்பாடு வாழ்பவன் அருண். இப்போ அவனுக்குப் பத்து வயதில் ஒரு பெண்ணும் ஒரு வயதில் ஒரு ஆணும் உள்ளனர்.

புரண்டு புரண்டு படுத்தும் நித்திரை வராமல் எழுந்து ஜன்னலோரம் போய் நின்றான் அருண். மெல்ல ஜன்னல் கதவு ஒன்றைத் திறந்து வெளியில் பார்த்தான். நிலவு தென்மேற்கு மூலையாக சரிந்த வண்ணம் இருந்தது. ஜில்லென்று குளிர் முகத்தில் அடித்தது. தென்னங்கீற்றுக்கள் மெல்லிய காற்றில் சலசலத்த வண்ணம் இருந்தன. தூரத்தே ஆந்தை ஒன்று அலறியது. மனதில் ஒரு விதப்பயஉணர்வு பிடித்தது. சட்டென ஜன்னலை மூடியவன் கட்டிலுக்கு வந்தான்.

இப்பவும் அவன் தாய் இருமிக் கொண்டேயிருந்தாள். இவனுக்குக் கஷ்டம் கொடுக்கக் கூடாது என அவள் தன்னையே வருத்திக் கொண்டு கிடந்தாள். அவன் அம்மா இப்போ ஓர் ஆஸ்துமா நோயாளி அவளை நாளை ஒரு நல்ல டாக்டரிடம் காட்டியே ஆகணும் என எண்ணிக்கொண்டாள். மெல்ல படுக்கையில் சரிந்தவன் நித்திரையில் ஆழ்ந்து போனான்.

திடீரென்று "எழும்புங்கப்பா, இஞ்சேருங்கப்பா எழும்புங்கப்பா" என்று மனைவி எழுப்பினாள். கண்களைத் திறந்தால் ஒரே எரிச்சல்.

"என்னடியப்பா விடிஞ்சிட்டுதே?" என்றான் கண்களைக் கசக்கிக்கொண்டு.

"எனக்கு ஒரு முடிவைச் சொல்லிட்டுப் படுங்க" என்றவாறு குழம்பிக் கிடந்த கூந்தலை அள்ளி முடித்தாள்.

பொங்கிட்டு வந்த கோபத்தை அடக்கியவாறு "என்னடி நேரங்கெட்ட நேரத்தில... சொல்லு" என்றான் அருண்.

"இந்த வீட்டில் ஒன்றில் உங்க அம்மா இருக்கனும் இல்லை நாங்க இருக்கனும்" என்றாள்.

சாபத்தின் மொத்த வடிவமும் அவன் முன் தோன்றியது போல் அவன் மனைவி நின்றிருந்தாள்.

"உனக்கு என்ன பிரச்சினை?"

"இஞ்ச பாருங்க உங்க அம்மாவால நாங்க ஒரு கண் நித்திரை கொள்ள முடியிறதில்லை. பிள்ளையை விடிய எழுப்பி படிப்பிக்கமுடிறதிலை அவளுக்கு வாற வருஷம் ஸ்கொலர்சிப் வேற. நானும் ஸ்கூலுக்கு ஒவ்வொரு நாளும் பிந்திப் போறன்" என்று பொரிந்து தள்ளினாள்.

"அதுக்கு"

"அவாவை உங்க அக்கா வீட்டிற்கு அனுப்பிடுங்க"

உலகமே அவன் தலையில் இடிந்து விழுவது போல் இருந்தது.

"அடியே! உன்ர இந்த வாழ்க்கை என் அம்மா போட்ட பிச்சை" என்று உரக்கக் கத்தவேண்டும் போல் இருந்தது. தங்கள் சண்டையால் பிள்ளைகள் இரண்டும் விழித்திடக்கூடாது என மனதை அடக்கிக் கொண்டான்.

"அது முடியாது. உன்னைப்போல் அத்தானும் ஏதாவது சாக்குப் போக்குச் சொன்னால் என்ன செய்வது?" என்றான்.

"அது அவங்க பிரச்சினை. இவ்வளவு நாளும் நீங்க பார்த்தது போதும். அங்க அனுப்பிடுங்க."

"அது ஒருபோதும் நடவாது" அழுத்தமாகச் சொன்னான் அருண்.

"அப்ப நாங்க எங்க அம்மா வீட்ட போறம். பிள்ளையின் ஸ்கொலர்சிப் எக்ஸாம் முடிஞ்சதும் வாறம்" என்றவாறு இவனின் பதிலுக்குக் காத்திராது சுவர்ப் பக்கமாக ஒருக்களித்துப் படுத்தாள்.

பெரும்பாலும் பெண்களே இப்படித்தான். பிறந்த வீடு போல் புகுந்த வீட்டைப் பார்ப்பதில்லை. அருண் நிமிர்ந்து உட்கார்ந்தான். இனி நித்திரை கொள்ள முடியாது. செம்பில் இருந்த தண்ணீரை மடக் மடக்கென்று குடித்தான். தாகத்தைத் தணித்த தண்ணீர் அவன் மனவேட்கையைத் தணிக்கவில்லை.

சொன்னது போலவே சாளினி தாய் வீட்டிற்குச் சென்று விட்டாள். அருண் தன் தாயை நல்ல பொறுப்பான பெண்வேலையாளை நியமித்துக் கவனித்து வந்தான். வேலை முடிந்து வரும்போது மனைவி வீட்டிற்குச் சென்று வருவான். இரண்டு

வீடுகளுக்கும் ஒரு சில கிலோ மீற்றர்கள் தொலைவே காணப்பட்டன. இவன் மனைவி விருந்தினர் போல இடை யிடையே வந்து செல்வாள். பிள்ளைகளும் இவனுடன் வந்து இங்கு தங்கிச் செல்வார்கள். இப்படியே இரண்டு மாதங்கள் ஓடியிருக்கும்.

ஒரு விடுமுறைநாள் சாலினியின் தாய் வீட்டிற்குப் புரொக்ரர் ஒருவர் வந்தார் சில பத்திரங்களில் அவளிடம் கையொப்பம் பெற்றார். ஒன்றும் புரியாமல் அவள் முழித்தாள்.

"என்ன இது?" என்றாள் ஆவேசத்துடன்.

"உன் மாமியார் தன் வீட்டையும் நகைகளையும் உங்களுக்கு எழுதிக் கொடுக்கச் சொன்னார் என்றார் புன் சிரிப்புடன் புரொக்ரர். இனம் புரியாத உணர்வுகளால் அவளுக்கு கண்கள் பனித்தன.

"மனிசி இண்டைக்கோ நாளைக்கோ என்று இழுத்துக் கிட்டுகிடக்கு உயிரோடு இருக்கும்போது தானம்மா கவனிக் கனும். உயிர் போனப்புறம் படைச்சுப் பாலை ஊத்தி ஒரு பிரயோசனமில்லை என்றவாறு புரொக்ரர் விடைபெற்றுச் சென்றார்.

மாமியை பார்க்கப்போகவேண்டுமென்ற ஆவல் அவள் மனதை வியாபித்திருந்தது. அவசர அவசரமாகச் சமைத்தாள். இடையிடையே அருணுக்குப் போன் பண்ணிப்பார்த்தாள். ஆனால் அவனது போன் சுவிட்ச் ஓப் செய்யப்பட்டிருந்தது. அவளை அறியாமல் மனம் பரபரத்தது. பிற்பகல் 2.30 மணியளவில் அவள் புறப்படத் தயாரானாள்.

"அம்மா நான் மாமி வீட்டை போறன். பிள்ளையள் ரியூசனால் வந்ததும் அங்க அனுப்பி வையுங்கோ" என்று சொல்லி தாயின் மறு மொழிக்கு காத்திராமல் மோட்டார் சைக்கிளில் வேகமாக புறப்பட்டுச் சென்றாள்.

பதினைந்து நிமிடங்களில் மாமி வீட்டை வந்தடைந்த போது அங்கு வழமைக்கு மாறான நிலைமை காணப்பட்டது. சிலர் அங்கு கூடி நின்றனர். எல்லோரும் தன்னை ஏளனமாகப் பார்ப்பது போல் அவள் உணர்ந்தாள். குற்றவுணர்வு ஆயிரம் முட்கள் கொண்டு அவள் உடம்பைத் தைப்பது போல் இருந்தது.

உளளே அருண் தாயின் கையை இறுகப்பற்றியவாறு தடவிக் கொண்டிருந்தான். இன்னும் சிலர் அருகே நின்றிருந்தனர். கணவனின் முகத்தைப் பார்க்கத் துணிவின்றி மாமியைப் பார்த்தாள். அவை இறுதிக்கணங்கள் எனப் புரிந்து கொண்டாள். காலடியில் அமர்ந்து கொண்டாள். மெல்லக் கால்களைப் பற்றினாள். அவை விறைத்திருப்பதை உணர்ந்தாள். மடை திறந்த வெள்ளம் போல் அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. கண்ணீரால் அந்தத் தாயின் பாதங்களைக் கழுவினாள். தன் பாவத்தைக் கரைக்க முயன்று தோற்றுக் கொண்டிருந்தாள், அப்போது அந்தத் தாயின் உயிர் உடலை விட்டு மெல்லப் பிரிந்து சென்றது. அனைத்து வலிகளையும் தாங்கி சிலையாக நின்றிருந்தான் அருண்.

- வலம்புரி சங்குநாதம் 07.01.2018

# மனிதத்தை தேடி

அந்த தனியார் பேருந்து மிக வேகமாக வந்து நின்றது. அச்சந்தியின் பஸ் தரிப்பிடத்தில் கூட்டமாக நின்ற உத்தி யோகத்தர்கள் முண்டியடித்து ஏறினார்கள். வேலை முடித்து வீடு செல்லும் அவசரம் அவர்களின் முகங்களில் தெரிந்தது. உத்தி யோகத்தர்களுடன் சேர்ந்து அந்த முதியவரும் ஏறிக்கொண்டார். வெள்ளை வேட்டியும் தோளில் ஒரு சால்வைத்துண்டும் அவர் அணிந்திருந்தார். எழுபத்தைந்து வயது இருக்கும். உழைத்துக் களைத்த அவர் தேகம். கைகளும் கால்களும் முறுக்கேறிய வலிமை உடையதாக இருந்தது. மொத்தத்தில் அவர் கடின உழைப்பாளி என்பது பார்க்கும் போது புரிந்தது.

அவர் பேரூந்தில் ஏறியதும் கசமுசாவென ஒவ்வொரு வரும் மற்றவர் காதைக் கடிக்கத் தொடங்கியதை அவர் அவதானிக்க தவறவில்லை. சிலர் புதிய ஜந்து ஒன்றைப் பார்த்தது போல் அவர் ஸ்பரிசம் படாமல் விலகி நின்றனர்.

மனதில் ஏதோ நெருட பஸ்சை நோட்டமிட்டார் அந்த முதியவர். பெரும்பாலும் பெண்களே அந்த பஸ்ஸை நிறைத் திருந்தனர். ஒரு சில ஆண்களும் அந்த பஸ்ஸில் இருந்தனர். பெரும்பாலானவர்கள் தூங்கிக் கொண்டு இருந்தனர். அல்லது தூங்குவது போல் பாசாங்கு செய்தனர்.

விழித்து இருந்தால் மற்றவருக்கு தன் இருக்கையை பகிர வேண்டும் என்ற பயத்தினால் கூட இருக்கலாம்.

சிலர் தம் கைத்தொலைபேசியில் ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டிருந்தனர். அதில் சிலர் தங்கள் காதுகளில் பாட்டுக்

கேட்கும் கருவியை அணிந்து இருந்தார்கள். அந்த முதியவர் ஆச்சரியமாக அவர்களைப் பார்த்தார். அவருக்கு தெரிந்த தெல்லாம் காதுகேளாதோர் தான் இப்படியான மெசின் அணிவார்கள். இப்போ ? ஆம்! இவர்கள் செவிடர்கள் தான். பக்கத்தில் நடப்பது என்னவென்று தெரிய விரும்பாது இருக்கும் இவர்களும் உண்மையில் செவிடர்கள். கொடுப்பிற்குள் சிரித்தார்.

"இந்தக் கிழவனை ஏண்டா ஏத்தினீ" தனக்கு மேல் உள்ள கண்ணாடியில் நடத்துனரைப் பார்த்துக் கத்தினான் வாகன ஓட்டி.

"ஆக்களேோடை ஆக்களாய் ஏறிட்டுது கிழம். ஆளை உதிலை இறக்குவோமா?" என்றான் பதிலுக்கு அவன்.

"ஏன் யாழ்ப்பாணம் போகாதா தம்பீ" என்று கேட்டார் அந்த முதியவர்.

சிலர் கொள் என்று சிரித்தனர்."

"பாவம் அவர் வரட்டும்" என்றதும் ஒரு நல்ல உள்ளம் "ஐயா இதில இருங்கோ என்று இடமும் கொடுத்தது அந்த உள்ளம்.

நன்றியுடன் நோக்கி ஓர் புன்சிரிப்புடன் அவ்விடத்தில் அமர்ந்தார் அந்த முதியவர்.

"ஐயா எங்கே போகனும்? டிக்கட் எடுங்க" என்றான் நடத்துனர்.

"கொடிகாமம்"

"ஐம்பது ரூபா தாங்க"

மடியில் சொருகி வைத்திருந்த பணப்பையை எடுத்து காசைப் பக்குவமாய் எண்ணிக்கொடுத்தார். அந்த முதியவர் பஸ் ஓடிக்கொண்டிருந்தது. இடைக்காலப் பாடல் ஒன்று அதில் ஒலித்துக்கொண்டிருந்தது. ஆனால் அதைக் கேட்பார் யாரும் இல்லை.

முதியவர் தனது இருக்கையில் முழுதாக இருக்க முடிய வில்லை. பக்கத்து இருக்கையில் இருந்தவர் பெருத்த உருவம் கொண்டவர். அவர் முதியவரின் இருக்கையில் அரைவாசியிடம் பிடித்திருந்தார்.

முதியவர் தன் இருக்கை நுனியில் அமர்ந்தவாறு பயணித்தார். சிறிது தூரம் சென்றிருக்கும் யன்னல் வழியாக காற்று முதியவரின் முகத்தில் பட தூங்கி வழிந்தவர். முன் இருக்கையின் கம்பியில் கையைப் பிடித்தவாறு தலையைக் குத்திக் கொண்டு தூங்கி தூங்கி விழுந்தார்.

அந்த முன் இருக்கையில் காதுகளில் கருவியை மாட்டி பாட்டினைக் கேட்டபடி வந்த அந்த நாகரிகப் பெண் மெல்ல தலையைச் சாய்த்து தன் இருக்கையில் ஒய்யாரமாக அமர்ந்தாள். தனது தலையில் ஏதோ பட சட்டென திரும்பியவள் கிழவரின் கையைப் பார்த்து முகம் சுழித்தாள்.

உடனே தனது கைப்பையில் இருந்து குடையினை எடுத்து முதியவரின் கையை இடித்து தள்ளினாள். திடுக்கிட்டு எழும்பிய முதியவர் ஒன்றும்புரியாமல் முழித்தவாறு இருந்தார்.

அவர் இறக்கம் வந்தது. மெல்ல இறங்கப் போனார் வாசலில் நின்று அப்பேருந்தில் இருந்தவர்களை ஒரு முறை உற்று பார்த்தார்.

"என்னய்யா என்ன தேடுறீங்க?" என்றான் நடத்துனன்

" நல்ல மனுசங்களை தேடுறேனப்பா என்றார்.

விருட்டென்று இறங்கி நடந்தார் முதியவர்.

"பார் கிழட்டுப்பிள்ளையின் திமிர..." என்று ஏளனமாகச் சிரித்தனர்.

இப்போதும் நடந்தது எதுவும் தெரியாதது போல் அந்த நவீன கைபேசிக்குள் மூழ்கிக்கிடந்தனர் பலர்.

# புரிதல்

குமரன் அவன் பெயருக்கேற்ப அழகானவன், மாநிறத்தவன், நெடிய உருவம். கூரான நாசி. நேரான பார்வை. நிச்சயம் பெண்களின் மனதைச் சலனப் படவைக்கும் உருவம் அவனுடையது. சிறுவயதில் அப்பாவை இழந்ததாலோ என்னவோ அம்மாவின் மனம் நோக நடந்ததில்லை. மொத்தத்தில் அவன் அம்மா பிள்ளை. வயது முப்பதைத் தாண்டும். அவன் கன்னி கலையாத காளை. தனியார் நிறுவனம் ஒன்றில் அண்மையில் தான் முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்றுள்ளான்.

"குமரா... குமரா..." என்று அம்மா குசினிக்குள் இருந்து கூப்பிட்டாள்.

குளியலறைக்குள் முகச்சவரம் செய்து கொண்டிருந்தவன் "என்னம்மா" என்று எட்டிப் பார்த்தான்.

"போன் அடிக்குது எடப்பா... நான் கையில் வேலையா இருக்கிறன்"

முகத்தில் பூசிய சவர்க்கார நுரையுடன் வெளிப்பட்ட குமரன் தொலைபேசியை அணுகி "ஹலோ" என்றான்.

அடுத்த நிமிடமே "அம்மா கனடாவில் இருந்து தருமு மாமா..." என்றான்.

அவ்வளவுதான். போட்டது போட்டபடி இருக்க ஓட்டமும் நடையுமாக வந்தாள் அம்மா. வரும்போதே கைகள் இரண்டையும் சட்டைக்கு மேல் கட்டிய துணியில் அழுந்தத் துடைத்த வண்ணம் வந்தாள்.

"நீ போய் அந்த காஸை நிப்பாட்டு. மறந்து போய் வந்திட்டன்" என்றாள் அம்மா.

தான் நிற்கக்கூடாது என அம்மா விரட்டுகிறாளோ என எண்ணியவாறு அவ்விடத்தைவிட்டுச்சென்றான் குமரன்.

முகச்சவரம் முடித்துக் குளித்தும் வந்துவிட்டான். ஆனால் தொலைபேசி உரையாடல் இன்னும் முடிந்ததாய் தெரிய வில்லை. அம்மாவிடம் கை மணிக்கூட்டைக் காட்டி னான், நேரம் போவதைப் புரிந்து கொண்ட தாய் "நான் உன்னுடன் ஆறுதலாய்க் கதைக்கிறன். மகன் வேலைக்குப் போற நேரமாச்சு. கொஞ்சம் பொறுத்து எடு" என்று கூறிப் போனை வைத்தாள்.

"என்ன அப்படி இவ்வளவு நேரமா அக்காவும் தம்பியும் கதைச்சனீங்கள்"

"எல்லாம் உன்ர கலியாண விசயம் தான்"

"ஏன் கனடாவில் எனக்கு பொம்பிளை பார்க்கிறாரோ மாமா?"

"ஏன் பார்க்கனும் கிளிக்குஞ்சு மாதிரி அவனிட்ட ஒரு பொண்ணு இருக்கே?"

"அம்மா எனக்கு வெளிநாட்டுப் பஞ்சவர்ணக்கிளி வேண்டாம். நம்ம நாட்டுக் குயில் போதும்" என்றான்.

காலை உணவை முடித்துக்கொண்டு வேலைக்குப் புறப்பட்டான் குமரன். வாசல்வரை வந்து வழியனுப்பிவைத் தாள் தாய் குமரனை எண்ணி அவள் மிக மனம் வருந்திய வண்ணம் இருந்தாள்.

குமரனின் சாதகம் பாவம் மிகக் குறைவான சாதகம், பாவம் கூடவும் கூடாதாம். குறையவும் கூடாதாம். பல குறிப்புக் கள் பார்த்தாயிற்று. ஒன்றும் பொருந்தியதாய் தெரியவில்லை. தான் காதலித்து திருமணம் புரிந்ததால்தான் வேளைக்கு வாழ்விழந்து போனதாய் தாயின் பேதை மனம் எண்ணியது. ஆதலால் மகனுக்கு ஜாதகப் பொருத்தம் சரியாக அமைய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள். இதனால் திருமணம் தடைப்பட்டுக் கொண்டே போனது.

இறுதியில் தனது தம்பியின் மகளை செய்யவென

முடிவெடுத்து விட்டாள். சொந்தத்தில் ஜாதகம் பார்க்கத்தேவை யில்லை. அம்மன் தாலி கட்டலாம் என்று தன்னைத் தானே திருப்திப்பட் டுக் கொண்டிருந்தாள் அம்மா. ஆரம்பத்தில் மக்கர் பண்ணிய மாமா இப்போது சம்மதித்தது தான் ஆச்சரியம்.

இரவு மணி ஏழைத் தாண்டியிருந்தது. பகல் முழுவதும் பெய்த மழையில் குளம் நிரம்பியிருந்தது. மாரித்தவளைகள் எல்லாம் மேளம் கொட்டுவதைப் போல் இராகம் இசைத்துக் கொண்டிருந்தன. மெல்லிய மழைக் குளிர் அந்தச் சூழலை மூடியிருந்தது.

குமரன் மடிக்கணனியில் ஏதோ தனது அலுவலக வேலை களைச் செய்து கொண்டிருந்தான். பின்னணியில் இளையராஜா வின் இன்னிசை கானங்கள் காற்றில் கலந்த வண்ணம் இருந்தன. "ரீயைக் குடிச்சிட்டு வேலையைச் செய் அப்பு" அன்பு கலந்த குரலில் அம்மா சொன்னாள்.

தேநீரை எடுத்து சூடாகக் குடித்தான். மழைக்குளிருக்கு இதமாக இருந்தது. தாய் அவனையே பார்த்த வண்ணம் நின்றிருந்தாள்.

"என்னம்மா! ஏதாவது புதினமோ?"

"ஓமடா தம்பி , மாமா தன் மகளை உனக்குக் கட்டித்தர விரும்புகிறார்"

"உது சரிப்பட்டு வருமாம்மா?"

"ஏன்டா அவளுக்கு என்ன குறைச்சல்"

"அதைச் சொல்லல... கனடாவில் வாழ்ந்தவள்..." இழுத்தான் குமரன்.

"அவள் என்ர தம்பி பொண்ணு. அவளுக்கும் சம்மதமாம்."

"அங்கத்தய கலாசாரத்தில் வளர்ந்தவ...

"அவள் நம்ம இரத்தமடா தம்பி. என்ர புள்ளையல்லே... மாட்டன் என்று மட்டும் சொல்லிப்புடாத"

"என்னமோ இனி உங்க இஷ்டம். நான் சொல்லுறதைச் சொல்லிட்டன்" என்று கதைக்கு முற்றுப்புள்ளி வைத்து , மீண்டும் தனது வேலைகளில் மூழ்கிப் போனான் குமரன்.

மாமா குடும்பம் கனடாவில் இருந்து வந்திருந்தது. திரு மணம் மண்டபம் ஒன்றில் வெகு விமரிசையாக நடந்தேறியது.

சொந்தக்காரர், இவனது அலுவலகத்தில் பணியாற்றுவொர், நண்பர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் திருமண ஜோடிகள் முதலிரவைக் கழிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குமரனின் நண்பர்கள் பலர் கிண்டல் அடித்தார்கள். சிலர் வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்கள். அவர்களிடம் இருந்து ஒருவாறு தப்பித்து ஹோட்டல் அறைக்கு வந்து சேர்ந்து விட்டனர் ஜோடிகள். இவர்கள் அறைக்கு வரவும் அங்கிருந்த தொலை பேசி மணி அடிக்கவும் சரியாக இருந்துத.

"சேர் நான் மனேஜர் கதைக்கிறன், உங்களுக்கு டின்னருக்கு என்ன ஏற்பாடு செய்ய?"

"லைட்டா ஏதாவது... நூடில்ஸ் வித் சிக்கன். வன் மினிட்" மனைவியின் விருப்பத்தைக் கேட்க திரும்பினான். அவள் குளியலறைக்குச் சென்றிருந்தாள்.

"பிரியா... பிரியா" என்றழைத்தான்.

"யா... சொல்லுங்க"

உனக்கு என்ன டின்னர் ஓடர் பண்ண"

"சிக்கன் பிரைட் ரைஸ்"

ஓடர் பண்ணிவிட்டுக் காத்திருந் தான். இவள் இன்னும் குளித்து முடித்து வரவில்லை. கதவைத் தட்டித் தானும் போய்ச் சேர்ந்து குளிக்கலாமா என்று ஒரு கணம் யோசித்தான். ஆனால் இருவருக்கும் இடையில் அவ்வளவு புரிதல் இன்னும் வரவில்லை.

அரை மணி நேரத்தின் பின் வந்தாள் பிரியா. அவளைப் பார்த்ததும் இவன் மனதில் ஒருவித ஏமாற்றமும் கோபமும் துளிர்த்தன. தாலிக்கொடி உட்பட அனைத்து நகைகளையும் அவன் கையில் கொடுத்தாள்.

"சொறிப்பா... இது ரொம்ப டிஸ்ரொப்பா இருக்கு; இது ஒன்று போதும்" என்று கழுத்துடன் ஒட்டியிருந்த நூல் சங்கிலியைக் காட்டினாள். தன் உணர்வுகளை மனதுக்குள் புதைத்துக் கொண்டான் குமரன்.

"நீங்க குளிக்கல" என்றாள்.

மௌனமாய் குளியலறைக்குச் சென்றான் குமரன். சவரைத் திறந்துவிட்டு அதன் கீழ் நின்றான். சுடுநீர் அவன் தேகத்தை தழுவிச் சென்றது. இனம் புரியாத உணர்ச்சிக்

கலவையில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்தது அவன் மனம்.

குளித்துமுடித்து வெளிய வந்தான். பிரியா ரீசேட் மற்றும் அரைக்காற்சட்டை அணிந்து கொண்டு கால்மேல் கால் போட்டபடி படுத்திருந்தாள். சிரித்துச் சிரித்து யாருடனோ கைத்தொலை பேசியில் ஆங்கிலத்தில் கதைத்துக் கொண்டிருந் தாள். இவனைக் கண்டதும் "கீ ஸ்மை ஹஸ்பெண்ட்" என்று காட்டினாள். மறுமுனையில் வெள்ளை இன வாலிபன் சிரித்தவாறு இவனுக்கு ஹலோ சொன்னான்.

இவனும் பதிலுக்கு ஹலோ சொல்லி விட்டு இவளைப் பார்த்தான்.

"கீ ஸ்மை போய் பிரண்ட்" என்று அறிமுகம் செய்தாள். அவர்களது நீண்ட உரையாடல் நீண்டு கொண்டே போனது. இவன் இதயம் ரணமாய் வலித்தது. உள்ளே நிற்கப் பிடிக்காது சட்டென்று வந்து பல்கணியில் நின்றிருந்தான்.

அண்ணார்ந்து வானத்தைப் பார்த்தான். வானம் கருமேகக் கூட்டங்களால் நிறைந்திருந்தது. அதனிடையே நிலவு ஒன்று அழகான வட்டவடிவமாய் ஒளி மிகுந்ததாய் மிளிர்ந்து கொண்டிருந்தது. கார் மேகக்கூட்டங்கள் அந்த நிலவைச் சிறைபிடிக்க முயன்று கொண்டிருந்தன. அந்த நிலா தப்பித்து ஓடிக்கொண்டிருந்தது. அந்த நிலா தான் பிரியாவோ என இவன் மனம் எண்ணிக் கொண்டது சிறிது நேரத்தில் கதவைத்திறந்து எட்டிப் பார்த்தாள் பிரியா.

"நீங்க உள்ள வாங்க"

"வாறன் நீ போ"

"எனி பிராப்ளம்"

"நத்திங்"

சட்டென்று கதவை மூடி அவள் உள்ளே சென்று விட்டாள். அவன் சிறிது நேரம் கழித்து உள்ளே வந்தான். கட்டிலில் வெளிர் நீல இரவு உடுப்புடன் அழகுதேவதை போல் ஒருக்களித்துப் படுத்திருந்தாள் பிரியா, மெல்ல அவள் அருகில் வந்தான். பகல் முழுவதும் களைத்திருந்ததால் அவள் நித்திரையாகியிருந்தாள்.

சிறிது நேரம் அவள் அழகை ரசித்த வண்ணம் நின்றிருந்

தான். முகம் குழந்தையின் முகத்தைப் போல் அப்பனுக் கற்றிருந்தது.

"அவள் எங்கட இரத்தமடா" என அம்மா சொன்னது ஞாபகத்திற்கு வந்தது.

அவள் என்னைப் புரிந்துகொள்வாளோ இல்லையோ நான் அவளைப் புரிந்து கொண்டு நடப்போம் எனத் தீர்க்கமான முடிவு எடுத்தவாறு பெருமூச்சு ஒன்றுடன் படுக்கையில் சரிந்தான் குமரன். அவனது பெரு மூச்சின் சூடு நிச்சயம் அவள் மனதைச் சுடும்.

- வலம்புரி சங்குநாதம் 14.10.2018

## மாறாத வடுக்கள்

உரும்பிராய். அது ஒரு அழகிய கிராமம். செம்பாட்டு மண் விவசாயம் செய்யும் மக்களே அங்கு அதிகம். விவசாயம் மட்டுமல்ல வீரம் விளைந்த மண்ணும்கூட. பராய் மரங்கள் சில நின்றதன் காரணத்தினால் உரும்பிராய் என்ற பெயர் வந்தது ஓர் ஐதீகம்.

1987 ஐப்பசி 20 ஆம் திகதி உரும்பிராய் மண்ணில் பொழுது இன்னும் புலரவில்லை. சூரிய கிரகணங்கள் தயக்கத்துடன் மண்ணை முத்தமிட்டன. கோழிகள் விடியலை வரவேற்கக்கூவவில்லை. குயில்கள் இன்னிசை இராகம் பாட வில்லை. ஆனால் அண்டங்காகம் ஒன்று ஒற்றைப் பனையில் இருந்து அவலக்குரல் எழுப்பியது.

"தம்பி... அந்தச் சனிக்காகத்தைக் கலை. விடியற் காலமையே கத்தத் தொடங்கிற்று. எங்க இழவு விழப்போதோ தெரியலை" என்றாள் தாய்.

மகன் கல்லெடுத்து எறிவதற்கு குனிந்தான். அச்சமயம் ஷெல் ஒன்று விழுந்தது. ஊரே அதிர்ந்தது. ஒரே ஓட்டமாக உள்ளே வந்து தரையில் படுத்தான் மூத்த மகன். அவனது இளைய தம்பி, தங்கைகளும் அவனைப்பார்த்து தரையில் படுத்தனர். சிறிது, நேரம் மயான அமைதி நிலவியது. கத்திய காகத்தையும் காணவில்லை. பின்னர் தொடர்ச்சியாக ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன. வீட்டில் இருந்த பிள்ளைகள் எல்லோரும் கத்தத் தொடங்கினார்கள்.

"அழாதையுங்கோ பிள்ளையள்... இந்தியன் ஆமி

இறப்பர் ஷெல்தான் அடிப்பான். பயப்பிடாதையுங்கோ” என்று காய்ச்சலுடன் படுத்திருந்த அப்பா குரல் கொடுத்தார்,

தந்தையின் குரலில் தெரிந்த நம்பிக்கையில் தாய் எழுந்து சென்று தேநீர் சூடாகப் போட்டுக்கொண்டு வந்து அமர்ந்தாள்.

ஒரு குவளையில் கணவனுக்கு ஊற்றி “இஞ்சி போட்டிருக்கன் சூடாகக் குடியுங்கோ” என்றாள் அக்கறையுடன்.

மெல்ல எழுந்து சுவரோடு அமர்ந்தார் கந்தசாமி.

“மலர் பிள்ளைகளுக்கு ஏதாச்சும் சாப்பாடு செய்து கொடு” என்றார்.

“இங்க என்ன இருக்கு? இருந்த மாவும் தீர்ந்து போச்சு. கொஞ்சக் குத்தரிசி மட்டும்தான் இருக்கு” என்றாள் மலர் பெருமூச்சுடன்.

விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அமைதிப்படைக்கும் இடையில் இருந்த முறுகல் நிலை யுத்தமாக வெடித்த நேரம். இந்திய இராணுவத்தின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி முகாம்களுக்குள் முடங்கச் செய்ய புலிகள் யுத்தத்தில் குதித்த நேரம்.

சொற்ப நேரத்தில் புலிகளை ஒழித்துக் கட்டுவோம் எனக் கங்கணம் கட்டிக் கொண்டு யுத்தத்தில் இறங்கிய இந்திய அமைதிப்படை பல அழிவுகளை எதிர்கொண்டன. இதனால் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தது. பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளை நிறைவேற்ற முடியாது தவித்தனர். உணவுப் பொருட்களுக்குப் பெருந்தட்டுப்பாடு நிலவியது.

இரண்டு நாட்களுக்கு முன்பு உரும் பிராய் பகுதியில் புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையில் பெரும் யுத்தம் வெடித்தது. யாழ். கோட்டைக்கும் பலாலிக்குமான தொடர்பைத்துண்டிக்க புலிகள் பெரும்பாடுபட்டனர். இச் சண்டையினால் மக்கள் பலர் இடம்பெயர்ந்து தென்மராட்சிப் பக்கம் சென்றனர்.

கந்தசாமி குடும்பமும் இடம்பெயர்ந்து நீர்வேலி வரை சென்றுவிட்டு, முடியாமல் இரவு மீண்டும் வந்து சேர்ந்தார்கள். கந்தசாமியும் மனைவியும் அவர்களின் ஆறு பிள்ளைகளும் எங்கே தங்குவது? போதாதற்கு பிள்ளைகளுக்கும் அப்பாவுக்கும்

காய்ச்சல் வேற.

அமைதிப்படையாக வந்த இந்திய இராணுவம் தீங்கு ஒன்றும் செய்யாது என பொதுவாக மக்கள் நம்பினர். அந்த நம்பிக்கை கந்தசாமியிடமும் இருந்தது.

அதனால் சொந்த வீட்டில் இருந்து கஞ்சியாவது குடிப்பம் என்று குடும்பத்துடன் வீட்டிற்கு வந்துவிட்டார்.

கடவுள் கந்தசாமிக்கு காசைக்கொடுக்காவிட்டாலும் பிள்ளைச் செல்வங்களை அள்ளிக் கொடுத்திருந்தார். மூன்று ஆண் பிள்ளைகளும் மூன்று பெண் பிள்ளைகளுமாக மொத்தம் ஆறு பிள்ளைச் செல்வங்கள். மூத்த மகனுக்கு பதின்மூன்று வயது இளையவன் பத்து மாதக் குழந்தை. இந்த நிலையில் எவ்வாறு இடம்பெயர்ந்து செல்வது?

"அக்கான்ர வீட்டில் மா வாங்கிட்டு அவிச்சுக்கொடு" என்றார் கந்தசாமி. கூப்பிடு தூரத்தில் உள்ள மச்சாள் வீட்டிற்கு மூத்த மகனை அனுப்பினாள் தாய்.

இதனிடையே ஷெல் சத்தங்கள் குறைந்து துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. சில துப்பாக்கி ரவைகள் சீறிக் கொண்டு வருவது போல இருந்தது. கிழுவை வேலிகளில் அவை பட்டுத் தெறித்தன. கிளைகள் முறிந்தன. யுத்த தாங்கிகளில் இருந்து சுடுவது போல் இருந்தது.

"என்னங்க பயமா இருக்கு, மாவிற்குப் போனவனையும் இன்னும் காணல"

"நீ சும்மா பயப்பிடாத. அவன் வந்திடுவான். இந்தியன் ஆமி ஒன்றும் செய்யாது."

"அம்மா... அப்பா..." என்று ஓடி வந்தான் மகன்.

"ஆமி ஆட்களைச் சுட்டுக்கொண்டு வாறானாம். இங்கு இருக்க வேண்டாமாம். எங்காவது போகட்டம்" மாமி சொன்னதை ஒப்புவிச்சான். செய்வதறியாது திகைத்து நின்றாள் மலர்.

"நீ ஒன்றுக்கும் பயப்பிடாதே. அவன் உள்ளுக்க இறங்க மாட்டான். றோட்டால தான் போவான்" என்று சொன்ன கந்தசாமியின் குரல் தளர்ந்திருந்தது.

"அம்மா பசிக்குதம்மா... வெள்ளைப்புட்டு அவியம்மா.

கனநாள் சாப்பிட்டு...” என்றான் மூத்தமகன். இளையவர்களும் “ஓமம்மா வெள்ளைப்புட்டு... வெள்ளைப்புட்டு...” என்று கோஷமிட்டனர். பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பது போல் இவர்கள் பயமும் காணாமல் போயிருந்தது.

ஆனால் வெடிச்சத்தம் அண்மித்துக் கொண்டிருந்தது. யுத்த தாங்கிகள் உறுமும் சத்தமும் கேட்டது. குசினிக்குள் புட்டு குத்திக் கொண்டிருந்த தாய் “நீங்க எல்லோரும் அப்பாவோடை அறைக்குள்ள இருங்கள்” என்றாள்.

பிள்ளைகள் எல்லோரும் தகப்பனை சுற்றிப் படுத் திருந்தார்கள். வெடிச்சத்தம் மிகவும் அண்மித்துவிட்டன காற்றினைக் கிழித்தவாறு துப்பாக்கிச் சன்னங்கள் பறந்து சென்றன. புட்டுக் குத்திய சுளகுடன் தாய் உள்ளே ஓடி வந்தாள்.

“ஐயோ வாறாங்களப்பா... வாறாங்கள்...” என்றாள் பதற்றத்துடன். பிள்ளைகள் எல்லோரும் ஐயோ அம்மா என்று கத்தினார்கள்.

“கத்தாதைங்கோ ... கத்தாதைங் கோ...” என்றார் அப்பா ஈன சுரத்தில்.

“எங்க வாறாங்கள்?”

“பக்கத்து வாழைத் தேட்டத்துக்க கண்டனான்”

கதவில்லாத வீடு. இரவில் மாத்திரம் கிடுகால் வேய்ந்த தட்டியால் முன் வாசலை மறைத்து விடுவார்கள். சுவாமி அறைக்கு மட்டும் கதவு போடப்பட்டிருந்தது.

எல்லோரும் சுவாமியறைக்குள் போனார்கள் மலர் புட்டுச் சுளகையும் உள்ளே கொண்டு சென்றாள்.

“எல்லோரும் சத்தம் செய்யாது நிலத்தில் படுங்கள். அவர்கள் போனதும் வெளியில் போகலாம் என்று அப்பா பிள்ளைகளுக்கு அறிவுறுத்தினார். எல்லாப் பிள்ளைகளும் நிலத்தில் குப்புறப் படுத்தார்கள். அறைக்குள் நிலவிய அமைதி பயங்கரமாய் இருந்தது. ஒவ்வொரு நொடியும் மரண யுகமாக கழிந்தது. ஏதுமறியாத பத்து மாதக் குழந்தை தாயுடன் முரண்டு பிடித்தது. உடனே தாய் தன் பாலை கொடுத்து அதனை ஆசுவாசப்படுத்த முயன்றாள்.

இந்திய இராணுவம் உரும்பிராய் விளைநிலங்களை

உழுத வண்ணம் வந்து கொண்டிருந்தது. புலிகளின் கண்ணி வெடிகளுக்குப் பயந்து ஊரை உழுத வண்ணம் இராணுவ ஊர்திகள் வந்து கொண்டிருந்தன. தமிழ் மக்களின் வீடுகள் பயன்தரு மரங்கள் என்பன துவம்சம் செய்யப்பட்டன. இந்திய இராணுவம் அமைதிப்படை எனும் வேஷம் களைந்து கொடிய பாஷிச இராணுவமாக தமிழரின் உயிர் குடிக்க முன்னேறி நகர்ந்தது. இந்திய கூர்க்கா இன சிப்பாய்களில் ஒருவன் முற்றத்தில் வந்து நின்று வீட்டை நோட்டமிட்டான். பின்னர் துப்பாக்கியை நீட்டியவாறு பதுங்கிப் பதுங்கி வீட்டினுள் நுழைய முற்பட்டான். சுவாமியறைக்குள் அனைவரும் இருந்ததனால் வெளியில் எவரும் தென்படவில்லை.

அவன் வாசலில் நின்று சந்தேகத்துடன் வீட்டுக்குள் இரு தரம் சுட்டான். அவ்வளவு தான் பிள்ளைகள் எல்லோரும் "ஐயோ அம்மா..." என்று கத்தினார்கள். உடனே தாய் தன் கைக் குழந்தையைக் கையில் ஏந்தியவாறு "ஐயா எங்களைச் சுடாதையுங்கோ" என்று கதறியவாறு முன்னுக்கு வந்தாள், திடுக்குற்ற சிப்பாய் மற்றயை சிப்பாய்களைக் கூப்பிட்டான். ஹிந்தி மொழியில் கத்தியவாறு மூன்று அல்லது நான்கு சிப்பாய்கள் ஓடி வந்தார்கள்.

"ஐயா எங்களைச் சுடாதையுங்கோ. நாங்கள் பொது மக்கள்." மீண்டும் கத்தினாள். பிள்ளைகளும் கத்தினர்.

சுவாமி அறை உள்ளே ஒருவன் எட்டிப்பார்த் தான். உடனே "எல்.ரீ.ரீ.ஈ...எல்.ரீ.ஈ..." என்று கத்தினான். காய்ச்சலால் போர்வையால் போர்த்தியவாறு தந்தை சுவரோடு சார்ந் திருந்தார். அவரைப் பார்த்துத்தான் அவன் கத்தினான்.

" நான் எல்.ரீ.ரீ.ஈ. இல்லை... நான் எல்.ரீ.ரீ.ஈ. இல்லை..." என்று பீதியுடன் கத்தியவாறு எழுந்தார் தந்தை. உடனே அவன் துப்பாக்கி நெருப்புத் தணல்களை கக்கியது. "அம்மா" என்று கத்தியவாறு சுவரோடு சரிந்து விழுந்தார் கந்தசாமி.

உடனே மனைவி "அவரைச் சுடாதையுங்கோ என்று கத்தியவாறு முன்னே பாய்ந்தாள். அவள் மீதும் அவள் குழந்தைகள் மீதும் துப்பாக்கிச் சன்னங்கள் பாய்ந்தன. ஏனைய சிப்பாய்களும் குழந்தைகளை நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர்.

மரண ஓலம் அந்த ஊரையே உலுக்கியது. குழந்தைகள் எல்லாம் தலையறுந்த குருவிக் குஞ்சுகளாய் துடித்துத் துடித்து இறந்தனர். தந்தையின் நெஞ்சில் இருந்து குபீரெனப் பாய்ந்த இரத்தம் பிள்ளைகளை நனைத்திருந்தது.

பதின்மூன்று வயது மூத்த மகனும் மூன்று வயது இளைய மகளும் இரத்தத்தில் தோய்ந்து செத்த பிணங்கள் போல் பாவனை செய்தனர். சூடுபட்ட போதும் தாயின் மார்பில் பால் குடித்தபடி குழந்தையும் தெய்வாதீனமாக தப்பிக் கொண்டது. ஏனையோர் செத்து மடிந்தனர்.

இரத்தம் வழிந்தோடி சுளகை நனைத்தது. வெள்ளைப் புட்டு தன் நிறம் மாறி சிவந்த புட்டாய் மாறிக்கொண்டது.

யாவும் கற்பனையல்ல

– வலம்புரி சங்குநாதம் 28.10.2018

# வாழ்க்கை வாழ்வதற்கே!

குயில் கூவிய சத்தம் கேட்டு நேரத்தைப் பார்க்க தலைமாட்டில் வைத்திருந்த கைப்பேசியைத் தேடினார் பொன்னர் எனப்படும் பொன்னம்பலம். கைக்கெட்டிய தூரத்தில் இருந்த கைப்பேசியை எடுத்து மெல்ல அதன் பொத்தானை அழுத்தினார். அதன் வெளிச்சத்தில் கண்கள் கூசின. கண்களைச் சுருக்கி சிரமப்பட்டவாறு நேரத்தைப் பார்த்தார். அது 3.40 என்று காட்டியது.

"அட விடிய இன்னும் நேரம் கிடக்கு. பாழாய்ப்போன நித்திரைதான் இன்னும் வருகுதில்லை" தனக்குத்தானே சலித்துக் கொண்டு மெல்ல எழுந்து உட்கார்ந்தார். நிலவு மேற்கே சரிந்த வண்ணம் இருந்தது. அதன் மேவிய வெளிச்சம் ஜன்னல் வழியே அவர் படுத்திருந்த இடத்தில் பரவியது. மெல்ல நிமிர்ந்து பார்த்தார். நிலவின் வெளிச்சத்தில் சுவரில் கனகம்மாவின் படம் மங்கலாய்த் தெரிந்தது.

"என்ன இண்டைக்கும் வேளைக்கு எழும்பியாச்சோ" என கனகம்மா கேட்பது போல் இருந்தது. அவரை அறியாமலே பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. "துன்பம் வருங்கால் நகுக" என்பது போல் மெல்லிய புன்சிரிப்பு அவரின் உதட்டோரம் தோன்றி மறைந்தது. அனைத்துத்துன்பங்களையும், வெளிக் கொணர்வது போல் இருந்தது அந்தப் புன்சிரிப்பு.

ஆம்! கனகம்மா போய் ஆறு மாதம் கூட ஆகவில்லை. அதற்குள் துரும்பாய் இளைத்திருந்தார் பொன்னர். கனகம்மா இல்லாதது அவரது வீட்டில் மட்டுமல்ல அவர் மனதிலும்

பெரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியிருந்தது.

அந்த வெற்றிடத்தை எவராலும் நிரப்ப முடியாது. மூன்று பிள்ளைகளைப் பெற்றுக் கொடுத்தவள். இவர் மனமறிந்து நடக்கும் மனுசி. இவருக்குச் சமனாய் தோட்டத்தில் மாடாய் உழைத்தவள். ஓடாய்த் தேய்ந்தவள். இன்ப துன்பங்களில் நேற்று வரை பங்கெடுத்தவள். இப்போ இல்லை.

“ஹாட் அட்ராக்” என்று வைத்தியர்கள் முடித்திருந்தனர். அவளின் இதயத்தில் எப்போதோ இடி விழுந்திருந்தது. ஆனால் பாவம் வைத்தியர்கள் இப்போதான் கண்டு பிடித்திருந்தார்கள். எப்போ மூத்த மகன் வீரமரணம் அடைந்தானோ அப்போது அவள் இதயத்தில் முதல் இடி விழுந்து விட்டது.

மீண்டும் குயில் கூவியது. அதன் ஜோடிக்குயில் ஒன்று சற்றுத் தூரத்தே இருந்து பதிலுக்குக் கூவியது. மெல்ல எழுந்து மின் விளக்கைப் போட்டார் பொன்னர். சுவர்க்கடிகாரம் 4.30ஐக் காட்டியது. கனகத்தின் படத்திற்கு அருகில் மூத்த மகன் வரி உடுப்புடன் புன்சிரிப்புடன் இருந்தான். ஜெயசிக்குறுக்கு எதிரான ஓயாத அலைகளில் காவியமானவன். “என் தெய்வங்கள்” என்று முணுமுணுத்தவாறு குசினிப்பக்கம் போனார் பொன்னர். மின் விளக்கைப் போட்டார். பக்கத்து வீட்டுப் பூனை ஜன்னல் வழியே பாய்ந்து ஓடியது.

விறகை அடுக்கி அடுப்பைப் பற்ற வைத்து கேற்றிலை வைத்தார். காஸ் அடுப்பு இருந்தாலும் இவருக்கு அது சரி வராது. அடுப்புக்குள்ள இருந்த கரித்துண்டு ஒன்றை எடுத்துக் கடித்தவாறு கோடிப்பக்கம் போனார்.

காலைக்கடன்களை முடித்துக்கொண்டு முற்றத்தில் இருந்த தண்ணீர்க் குழாயில் கை, கால், முகத்தைக் கழுவிக் கொண்டார். முற்றத்தில் இருந்த நித்திய கல்யாணியில் வேண்டிய அளவு பூக்களைப் பறித்தார். அன்பு மனைவியினதும் ஆசை மகனினதும் படங்களில் வைத்து கண்களை மூடி சிறிது நேரம் நின்றார்.

“நல்லாட்சி அரசாங்கம் ஆட்சியமைத்த பிறகு செய்த ஒரேயொரு நல்ல வேலை இது மட்டும் தான்” என்று அடிக்கடி அவர் சொல்லிக் கொள்வார்.

சுவாமிப்படங்களுக்குப் பூவைத்துக் கும்பிட்டு குசினுக்குள் வந்தார். கேற்றில் வாயினால் ஆவி பறந்து கொண்டிருந்தது. சுடுதண்ணீரில் தேயிலையைப் போட்டு சாயத்தை எடுத்து சீனியைப் போட்டுக் கலக்கி எடுத்து வந்து முற்றத்தில் போட்டிருந்த கதிரையில் அமர வைரர் கோயில் மணியும் அடித்தது. அஞ்சுமணி என்று முணு முணுத்தவாறு சூடானதேநீரை உறிஞ்சிக் குடித்தார்.

பக்கத்து வீடுகளில் சவசலப்புத் தோன்றியதும் தோளில் போடப்பட்டிருந்த துண்டை எடுத்துத் தலைப்பாகையாய் சுற்றிக் கொண்டு வளவைக் கூட்டத் தொடங்கினார் பொன்னர். ஒருபோதும் சும்மா இருந்ததில்லை. அன்று தொட்டு இன்று வரைக்கும் இயங்கிக் கொண்டேயிருந்தார்.

"ஐயா... ஐயா..." என்று கூப்பிட்டுக்கொண்டு வந்தாள் பக்கத்து வீட்டுப் பரிமளம். "சூடாக இடியப்பமும் சொதியும் கொண்டு வந்திருக்கேன். சூடு ஆற முதல் சாப்பிடுங்கோ"

"குசினியைத் திறந்து வைச்சிட்டுப் போ பிள்ளை." பரிமளம்தான் மூன்று நேரச் சாப்பாடும் கொடுக்கிறாள். பக்கத்துவீடு மட்டுமல்ல தூரத்துச் சொந்தமும்கூட. இரண்டு பிள்ளைகளின் தாயான பரிமளம் சாப்பாட்டுக்கடைகளுக்குப் பலகாரம் செய்து கொடுப்பவள். அவளது கணவன் சந்தையில் வியாபாரம் செய்பவன். பரிமளத்திற்கு சாப்பாட்டிற்கு என மாதம் பத்தாயிரம் கொடுப்பார் அவ்வப்போது அவளது இரு குழந்தைகளுக்கும் கையில் காசு வைப்பார். பரிமளம் தடுத்தாலும் கேட்கமாட்டார்.

"நாய் தின்னாக் காசு" என்பார். பரிமளத்தின் பிள்ளைகள் இரண்டும் பெண் பிள்ளைகள். "இன்னும் இரண்டு சிங்கக் குட்டிக்களாகப் பெறு" என்று அடிக்கடி சொல்லுவார்.

"எங்கட தமிழ் இனம் கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையா போயிற்று" என்று ஆதங்கப்படுவார் பொன்னர்.

நேரம் மதியத்தைத் தாண்டியிருந்தது. பொன்னர் வராந்தாவில் போட்டிருந்த சாய்மனைக்கதிரையில் படுத்தவாறு பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். அவரது கைப்பேசி ஒலி எழுப்பியவாறு இருந்தது. மெல்ல எழுந்து போய் அதன் பச்சைப்

பொத்தானை அழுத்தி "ஹலோ" என்றார்.

"நான் தான் மாமா வதனி" என்றது மறுமுனையில் ஒரு குரல்.

"சொல்லம்மா எப்படி இருக்கறீங்க."

"சுகமா இருக்கிறேன். நீங்க எப்படி?"

"இங்க எல்லாரும் சுகமாக இருக்கிறம். கடைசிப் பேரன் எப்பவும் உங்களைத் தான் கேட்பான்" பொன்னர் வாய் விட்டுச் சிரித்தார்.

"நீங்க லண்டனுக்கு வந்தா என்ன? உங்க இருந்து என்ன செய்யப் போறீங்க?" பொன்னர் விக்கித்து நின்றார்.

"என்ன மாமா சத்தத்தைக் காணோம்".

"நான் என்னத்தைச் சொல்வது எனக்கு உங்க சரிப்பட்டு வராது புள்ள"

"அவர் இரண்டு வேலைக்குப் போறவர். நானும் ஒரு வேலைக்குப் போறனான். நீங்க வந்தா பிள்ளைகளுக்கு உதவியா இருக்கும்."

"உங்கத்த குளிர் எனக்கு சரி வராது புள்ள."

"எத்தனை பேர் உங்களைப் போல் இங்க இருக்கினம்"

"நீங்க வந்தா கிண்டர்க்காடினுக்கு இப்பவே பிள்ளைகளை விடத்தேவையில்லை. சோசலுக்குப் பதிஞ்சு உங்களுக்கு எடுக்கலாம்"

"குறை நினையாத புள்ள. இந்து மண்ணுல தான் என் உசிர் போகனும். உடல் வேகனும்."

"இந்த மண் சொந்த மண் என்று கட்டிப் புடிச்சுக் கொண்டு கிடவுங்க."

தொலைபேசி இணைப்புத் துண்டிக்கப்பட்டது.

பொன்னர் கொடுப்புக்குள் சிரித்தார். விரக்தியின் வெளிப்பாடாய் துன்பத்தில் வந்த சிரிப்பு. அந்த நேரம் பார்த்து மதியச் சாப்பாட்டுடன் உள் நுழைந்தாள் பரிமளம்.

"என்ன ஐயா முகம் எல்லாம் வாடிக் கிடக்கு."

நடந்ததைச் சொன்னார் பொன்னர்.

"ஒருக்கா போட்டு வாறது தானே"

"பாத்தியே என்னைப் பற்றி புரிஞ்சு கொண்ட நீயும்

உப்பிடிக் கதைக்கிறாய்"

"நான் சும்மா தான் சொன்னேன். உதையொண்டும் யோசியாமை சாப்பிடுங்கோ"

மேசையில் வைத்து மூடிவிட்டு தன் அலுவல்கள் பார்க்க அவசரமாய் ஓடினாள் பரிமளம்.

பொன்னருக்கு நெஞ்சுக்குழிக்குள் கட்டை கிடப்பது போல் அவஸ்தைப்பட்டார். அவர் மனதை யார் புரிந்து கொள் கிறார்கள்?

"இந்த மண்ணை விட்டு நான் எப்படிப் போறது. என்ர மனுசி, மகன் இந்த மண்ணில் தான் உயிரை விட்டுதுகள். என் மகன் இந்த மண்ணுக்காகதானே உயிரை விட்டான். என் பிள்ளையைப் போல் எத்தனை ஆயிரம் ஆயிரம் பிள்ளைகள் இந்த மண்ணுக்காக உயிரை விட்டுதுகள். என் அப்பு, ஆச்சி வாழ்ந்த என்னை வளர்த்த, என் பிள்ளைகள் தவழ்ந்து விளையாடி வளர்ந்த இந்த மண்ணைவிட்டு நான் எப்படி போறது? இந்த உடல் இந்த மண்ணுக்குத்தான்"

பொன்னர் தனக்குத் தானே சொல்லிக் கொண்டார். தனிமையில் இவர் இப்படிக் கதைத்தே பொழுதைக் கழித்திடு வார். மெல்ல எழுந்து வீட்டின் கோடியில் உள்ள வளவை நோக்கிச் சென்றார்.

வரிசையாகத் தென்னைகள். கொஞ்ச வாழைகள். நடுவே மாமரம். தேசி எனச் சோலையாக இருந்தது. தென்னைகளைத் தொட்டுத்தழுவி மேலே அண்ணாந்து பார்த்தார். எல்லா மரங்களும் நிறைமாத கர்ப்பிணி போலக் காட்சியளித்தன. என்னை வாழ வைக்கும் தெய்வங்கள் என முணுமுணுத்துக் கொண்டார். மாவீரர் தினங்களில் கிடைத்த தென்னங்கன்றுகள் விதைகள் இப்போ விருட்சங்களாய் விளைந்து நின்றன. இதுவே அவர் வாழ்வாதாரம். வெளிநாட்டுக் காசு அவருக்குத் தேவையில்லை. அவர் அதை எதிர்பார்ப்பதும் இல்லை.

நேரம் மூன்றைத் தாண்டியிருந்தது. பரிமளம் ஐயாவைத் தேடி வந்தாள். வீட்டில் காணவில்லை. வாசல் கதவு திறந்திருந்தது.

"ஐயா... ஐயா..." கூப்பிட்டுப் பார்த்தாள், பதிலைக்

காணோம்.

"எப்பவும் இப்படித்தான். கதவைப் பூட்ட மறந்திடுவார்" என்று சொல்லியவாறு கதவைப் பூட்டப் போனாள். மேசையில் சாப்பாடு மூடியபடியிருந்தது.

இன்னும் சாப்பிடாமல் என்ன செய்கின்றார்?" என்று ஐயுறவு கொண்டுவிட்டு வீட்டின் பின்பக்கம் வந்தவள் திடுக்குற்றாள்.

"ஐயா..." என்று கத்தியே விட்டாள். பொன்னர் கயிற்றுக்கோர்வையுடன், திடுக்குற்று நின்றார். ஓடிச் சென்று கயிற்றைப் பறித்தாள்.

"நாங்கள் இருக்கிறம் உங்களுக்கு" என்றாள் நடுங்கும் குரலில். கைகளைப் பற்றிக்கொண்டு அழுதாள். பொன்னாருக்கு இப்போதான் எல்லாம் விளங்கியது.

"அடபிள்ள..." என்றவாறு வாஞ்சையுடன் தடவினார்.

"நான் என்ன தூக்கில் தொங்கப் போறன் என்று நினைச்சியே?" மெல்லச் சிரித்தார்.

"இந்த இதரை வாழை பெரிய குலை போட்டிருக்கு. காத்து அடிச்சு சரிஞ்சு போய் நிக்குது. அதான் இந்தக் கயித்தை மாமரத்தில்போட எறிஞ்சன்"

"நான் பயந்து போயிட்டன் ஐயா"

"நான் ஒன்றும் கோழையல்ல தூக்கும் போடும் அளவுக்கு. தற்கொலை ஒன்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வல்ல புள்ள"

"ஓம் ஐயா ஆனா பேப்பர்கள்ல வாற செய்திகளைப் பார்த்துப்பார்த்து மனம் பயந்து போய்க்கிடக்கு"

"ஓமடி புள்ள. இந்த சின்னஞ்சிறுசுகள் எல்லாம் தற்கொலை செய்துகள். அதுகளுக்குத் தெரியலை நாம் ஒரே நாளில் செத்துப் போறம். ஆனா உறவுகள் நம்ம நினைத்து நினைத்து ஒவ்வொரு நாளும் சாகுதுகள்" என்று சலித்துக் கொண்டார் கிழவர்.

பொன்னர் மீண்டும் தொடர்ந்தார். "இந்த என்னைப்பார் எழுபத்தைஞ்சு வயசிலேயும் வாழத்தான் ஆசைப்படுறன். இந்த உலகமே மனிதன் வாழ்வதற்குத்தான் படைக்கப் பட்டிருக்கு.

சாவு வாற நேரத்தில வரட்டும். ஆனா நாம ஏன் அதனைத் தேடிப்போகணும்?"

பரிமளம் இரு கண்களும் விரிய அவர் சொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தாள். அந்த நேரம் பார்த்து ஐயாவின் கைப்பேசி அடித்தது. இடுப்பில் செருகியிருந்த கைப் பேசியை எடுத்து "ஹலோ" என்றார்.

ஆயிரம் வோல்ட்டேஜ் மின்குமிழைப் போல் அவர் முகம் பிரகாசமானது.

"அடிபுள்ள மகள் என்னைப்பார்க்க லண்டனில் இருந்து வாறாள், வாறகிழமை வந்திறங்கப் போறாள்."

"ஓ... அப்படியே!"

"ஓமடி புள்ள குடும்பத்தோட வாறாள். எங்கடி புள்ள நல்ல ஊர்ச் சேவல் வாங்கலாம்?" என்று பரபரத்தர் பொன்னர். இனி அவரைப் பிடிக்கவே முடியாது. உற்சாகம் அவரைத் தொற்றிக் கொண்டது.

இவர் நிச்சயம் நூறு வயது வரை வாழ்வார் என்று எண்ணினாள் பரிமளம்.

- வலம்புரி சங்குநாதம் 13.01.2019

கலை இலக்கியப் போட்டியில் மாவட்ட ரீதியில்

2 ஆம் இடம் பெற்ற கதை.

# கல்வியே எங்கள் மூலதனம்

சில் என்ற குளிர்ந்த நீர் முகத்தில் பட்டு சுய நினைவிற்கு வந்தான் ரகு. உடலெல்லாம் ரணமாக வலித்தது. மரணவலி, "அம்மா" என்று முணகிக்கொண்டான். கையைக் காலை அசைக்க முடியவில்லை. இரண்டு கைகளும் கால்களுடன் பின்புறமாக மடக்கிக் கட்டப்பட்டிருந்தது. உடம்பில் இடுப்புப் பகுதி தவிர மிகுதி அம்மணமாக இருந்தது. உதடுகள் வெடித்து எச்சில் விழுங்க முடியாத நிலை. வாயில் உமிழ்நீருடன் இரத்தமும் வழிந்தது.

உடம்பு முழுவதும் சப்பாத்துக் கால்களால் மிதியுண்ட உட்காயங்கள். இரும்புக் கம்பிகளுக்கு அப்பால் நான்கு அடி அகலம் கொண்ட அந்தக் குறுகிய இடத்தில் தன் இளமையை மட்டுமல்ல எதிர்காலத்தையும் தொலைத்தவனாக சுருண்டு கிடந்தான் ரகு. அவனது மனமோ அனலில் அகப்பட்ட ஆலிலை போல் கருகிக் கிடந்தது. "ஐயகோ" என்று கத்தி அழுதாலும் தீராது அவனது வேதனை, ரகுவின் இந்த நிலைக்குக் காரணம் தான் என்ன?

அன்று திங்கட்கிழமை காலை ஏழு மணி. மாணவர்கள் வெண்ணிறப் பட்டாம்பூச்சிகளாக பாடசாலைக்கு வருகை தந்த வண்ணம் இருந்தனர். கள்ளம் கபடமற்ற அந்த முகங்களைப் பார்த்தாலே மற்றவருக்கும் உற்சாகம் பிறக்கும். வெறும் கட்டடங்களாக இருந்த பாடசாலை இப்போது உயிர்பெற்று எழுவது போல் இருந்தது. சில மாணவர் தமக்கு என ஒதுக்கப்பட்ட கடமைகளைச் செய்யத் தொடங்கினர்.

பல மரங்களைக் கொண்டமைந்த அந்தப் பாடசாலை ஓர்

சோலையாகவே காட்சியளித்தது. சனி, ஞாயிறு தினங்களில் அதிகமான சுருகுகளை அவை உதிர்த்திருந்தன. தனக்கென ஒதுக்கப்பட்ட பிரதேசத்தில் சருகுகளைக் கூட்டி அள்ளும் மாணவர்களை மேற்பார்வை செய்தவாறு நின்றிருந்தான் ரகு.

அந்தக் கிராமத்துப் பாடசாலையில் சிரேஷ்ட மாணவத் தலைவன் மட்டுமல்ல கல்வி மற்றும் விளையாட்டிலும் அவன் கெட்டிக்காரன். விஞ்ஞானப் பாடத்தைத் தன் உயர்தரப் பிரிவாக தெரிவு செய்திருந்தான். ஏழை மக்களுக்கு குறைந்த செலவுடன் வைத்தியம் செய்யவேண்டும் என்பது அவனது இலட்சியம்.

தனது நண்பன் ராமிற்கு ஒதுக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூடப் பிரதேசம் சுத்தம் செய்யாதிருப்பதை அவன் காணத் தவறவில்லை. ராம் பாடசாலைக்கு வரவில்லை என்பதைப் புரிந்து கொண்டான். அவன் நண்பனின் பிரதேசத்தைத் துப்புரவு செய்ய முன்வரவும் பிரார்த்தனை மணி ஒலிக்கவும் சரியாக இருந்தது. நண்பனின் பிரதேசம் மட்டுமல்ல அவனின் மனமும் சுத்தம் செய்யப்பட வேண்டும் என எண்ணிய ரகுவிடம் பெருமூச்சு வெளிப்பட்டது.

"டோய் மல்லி...எழும்புறது...சரியா..."

என்றான்... நீரைக் கொட்டிய அந்தச் சிறைக்காவலாளி. இரும்புக் கதவை திறந்து உள்ளே வந்தான்.

"நாளைக்கு கோட்டுக்குப் போறது சரி" என்றவாறு கட்டுக்களை மெல்ல அவிழ்த்துவிட்டான்.

"ஐச் ஐயாக்கிட்ட... இங்க நடந்தது எதுவும் சொல்லுற தில்லை... சரியா..." தமிழைச் சப்பித் துப்பியவாறு எச்சரிக்கை செய்தான். எழும்ப முடியாது மெல்ல சுவரோடு முதுகைச் சாய்த்தவாறு இருந்தான் ரகு.

"எப்படியிருந்த நான் இப்படி ஆயிட்டேன்" அவன் மனம் விம்மியழுத்து. இரண்டு கிழமைகளுக்கு முன்பு தான் ஒரு நாள் ரகு தன் நண்பன் ராமுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டிருந்தான்.

"ஏன்டா நீ ஒழுங்கா ஸ்கூலுக்கு வாறதில்லை படிப்பை கைவிட்டாச்சோ..."

மௌனியாகவே நின்றான் ராம்.

"உன்னை நம்பி ஒரு குடும்பம் இருக்கு புரிஞ்சுக்க"

என்றான் ரகு.

"எனக்கு பல வேலை இருக்கும், நீ படி... உன்னை யார் மச்சான் தடுத்தது" என்றான் ராம். அவனது வார்த்தைகளில் வெறுப்பின் சாயல் இருந்தது.

"ஏன் மச்சான் உப்பிடிக் கதைக்கின்றாய்?"

"நீ டொக்டரா வா முதல் அதைச் செய் என்னைப் பற்றிக் கவலைப்படாதே" என்றான் ராம்.

"உன்ர அம்மா, அப்பா எவ்வளவு கஷ்டப்படுகினம்..?" ஆதங்கப்பட்டான் ரகு. ஆத்திரம் கொண்டவனாக ரகுவின் சேட் கொல்லரைப் பிடித்தான் ராம்.

"நீ உன் வேலையை மட்டும் பார்" என்றான் அழுத்தமாக.

திடுக்குற்றான் ரகு. என்ன ஒரு கோபம் கண்கள் சிவப்பேறி அப்படி ஒரு பயங்கரம். கோபத்தால் அவன் உடல் நடுங்கியது தன்னையே கட்டுப்படுத்த முடியாதவனாக நின்றிருந்தான் ராம். ஒருபோதும் நண்பனை அக்கோபத்தில் பார்த்ததில்லை.

ஒருமுறை ரகுவைத் தேடி குரு வந்திருந்தான் "வா மச்சான்.. என்ன இங்கால காத்தடிச்சிருக்கு?"

"சும்மா உன்னைப் பார்த்திட்டுப் போவம் என்று வந்தேன்டா" என்றான் குரு.

குருவும் ரகுவும் தனியார் கல்வி நிறுவ னத்தில் ஒன்றாகப் படிக்கும் சிநேகிதர்கள். குரு நகரப் பாடசாலையொன்றில் கல்வி கற்கின்றான்.

"எப்படிப் போகுது தம்பி படிப்பு" என ரகுவின் தாய் விசாரித்தாள்.

"படிக்கிறேன் அம்மா" என்றான் குரு அடக்கமாக அவர்களைக் கதைக்கவிட்டு அடுக்களைக்கு போனாள் தாய்.

"டேய் மச்சான்" என்றவாறு கதிரை நுனிக்கு வந்து அங்குமிங்கும் பார்த்தான் குரு.

"என்ன மச் சான், ஏதேனும் பிரச்சினையா?"

"உவன் ராமின் போக்கு சரியில்லை"

"நானும் கவனித்தேன்... ஸ்கூலுக்கு அவன் ஒழுங்கில்லை. ரவுன் பக்கம் மினக்கெடுறான்."

"பாக்குப் போடுறான் போல இருக்கு"

"கேட்கப் போனா சண்டைக்கு வாறான்" என்றான் ரகு.

"இன்னும் என்னென்ன பழகி உள்ளானோ?" சந்தேகப் பட்டான் குரு.

"இத இப்படியே விடமுடியாது மச்சான்" என அழுத்திக் கூறினான் ரகு.

அம்மா கொண்டு வந்த தேநீரை இருவரும் அருந்தினார்கள். பின்பு விடைபெற்றுச் சென்றான் ரகு. முன்னரே திட்டமிட்டது போல் ரகுவின் தலைமையில் மாணவர் குழுவொன்று ஆயத்தமானது. போதை ஒழிப்பு பதாகைகளுடன் நகரின் முக்கியமான அந்த இடத்தில் ஒன்றுகூடினர். போதை ஒழிப்பு தொடர்பான கோஷங்களை எழுப்பினர். ரகு உச்ச சுரத்தில் கோஷமிட்டான். ஏனையவர்களும் அடியொற்றி கோஷமிட்டனர்.

சில நிமிடங்கள் சென்றிருக்கும். எங்கோ இருந்து வேகமாக உந்துருளிகள் சில வந்து நின்றன. அதில் தலைக் கவசம் அணிந்து வந்த குண்டர் கூட்டம் ஒன்று இவர்களைத் தடிகள், கம்பிகள், கொண்டு தாக்கத் தொடங்கியது. மாணவர் எல்லோரும் "மாணவர் சக்தி மாபெரும் சக்தி" எனக்கோஷமிட்டனர். கோஷங்கள் மெல்ல மெல்லத்தேய்ந்து மரண ஓலங்களாக மாறின. வந்தவர்கள் மின்னல் போல் மறைந்தனர். சிறிது நேரத்தில் பொது மக்கள் அங்கு கூடிவிட்டனர், பொலிஸாரும் வந்தனர். ரகுவை பொலிஸார் கைது செய்தனர். கலகத்தில் ஈடுபட்டவர்களின் தலைவன் என ரகு மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இரும்புக் கம்பிகளில் கோலால் தட்டப்படும் ஓசை கேட்டு திடுக்குற்று எழுந்தான் ரகு. விடிந்திருந்தது. இன்று திங்கட்கிழமை, நீதிமன்றில் அவன் குற்றம் விசாரிக்கப்படவுள்ளது. அவன் காலைக்கடன்களை முடித்து குளிப்பதற்குரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்பட்டன.

நேரம் முற்பகல் 10.30. நீதிமன்றம் அவன் சினிமாவில் பார்த்தது போல் இருக்கவில்லை. இவனது வழக்கு விசாரணைக்கு வந்த போது வழக்கறிஞர் ஒருவரால் நீதிபதிக்கு வழக்கின் விபரம் தெரிவிக்கப்பட்டது. நீதிபதி தனது மூக்குக்

கண்ணாடி வழியாக அவனை அளவிடுவது போல் உற்றுப் பார்த்தார்.

"நீர் உம் குற்றத்தை ஒப்புக் கொள்கின்றீரா?"

"ஆம் ஐயா" என்று தயக்கத்துடன் கூறிய ரகு "உங்களிடம் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகின்றேன் ஐயா" என்றான்.

நீதிபதி என்ன என்பது போல் நிமிர்ந்து பார்த்தார்.

"எம் பிரதேசத்தில் மாணவரை இலக்கு வைத்து போதைப்பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. அதனால் தான் நாங்கள்..." நீதிபதி கையசைத்து இடைமறித்தார்.

"மாணவர்கள் நீங்கள் ஒருபோதும் சட்டத்தைக் கையில் எடுக்கக்கூடாது. உங்கள் கடமை எதுவோ அதைமட்டும் செய்யுங்கள். சட்டம் தன் கடமையைச் செய்யும்" என்றார் அழுத்தம் திருத்தமாக.

"மூன்று மாதங்களில் உயர்தரம் பரீட்சை வருவதால் என்னை மன்னித்து விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொள்கி ன்றேன்" என்றான் ரகு கண்கள் பனிக்க.

ஐம்பதாயிரம் சரீரப் பிணையில் ரகு விடுதலை செய்யப்பட்டான். அம்மா மற்றும் வகுப்பாசிரியருடன் ராமும் வந்திருந்தான். தாய் ஓடிவந்து அவனைக் கட்டிய பிடித்து கதறியழுதார். "உனக்கு ஏனப்பு இந்தப் பொல்லாத வேலை" கடிந்து கொண்டாள் தாய். ராமைப் பார்த்ததும் ரகுவிற்கு மட்டற்ற மகிழ்ச்சி. அவனிடம் மாற்றம் தெரிந்தது.

"மச்சான்... என்னடா நீ... எனக்காக... இப்படி யெல்லாம்..." வார்த்தைகள் வெளிவரவில்லை. ரகுவைக் கட்டியணைத்தான்.

இருவரது நட்பையும் பார்த்து ஆசிரியர் அகமகிழ்ந்தார். "வீட்ட போய் கதைப்பம்" என்றார். அனைவரும் ரகுவின் வீட்டிற்குப் போனார்கள்.

ஆசிரியரின் அறிவுரைகளும் ரகுவின் தியாக உணர்வும் ராமின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தி யிருந்தன. இவ்வுலகில் மாற்றம் ஒன்றுதானே நிலையானது.

ஆசிரியர் செருமிக்கொண்டு மாணவர் இருவரையும் பார்த்துக் கூறினார். "ஒரு காலத்தில் தமிழன் இங்கு கல்வியில்

கொடி கட்டிப் பறந்தான். அப்போ தரப்படுத்தல் என்ற ஒன்றால் அவனது பல்கலைக்கழக அனுமதி மட்டுப்படுத்தப்பட்டது.

இதுவே இனப்பிரச்சினைக்கு வித்திட்டது. ஆனால் இப்போ தரப்படுத்தல் இல்லா விட்டால் எமது பல்கலைக்கழக அனுமதி மிகச் சொற்பமாக இருக்கும். அந்தளவிற்கு எமது கல்வி மட்டம் வீழ்ச்சியடைந்துவிட்டது. எமது மாகாணம் கல்வி அடைவு மட்டத்தில் பின்தங்கியிருப்பது மிகவும் வேதனைக்குரியது."

"இதற்கெல்லாம் யார் காரணம்?" ஆதங்கப்பட்டான் ரகு.

"நாம் தான் காரணம்" என்றார் ஆசிரியர் அமைதியாக.

மாணவர் இருவரும் அதிர்ந்து போயினர்.

ஆசிரியர் மெல்லச் சிரித்தவாறு தொடர்ந்தார்.

"எமது மாணவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் போதைப் பொருள் விநியோகம் கட்டுப்படுத்தப் படாத இணையம், தாராள மதுபான வர்த்தகம், வன்முறையைத் தூண்டும் சினிமா போன்றன எம் மாணவர்களின் கல்விக்கு குந்தகம் விளைவிக்கின்றன."

எனவே இவற்றையெல்லாம் வெற்றிகொண்டு கல்வியில் முன்னேற நாம் செய்யவேண்டியது யாதெனில் என்று கூறி இருவரையும் பார்த்தார். மாணவர் இருவரும் மந்திரத்திற்கு கட்டுண்டவர்கள் போல் ஆசிரியரை இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தனர். அவர் உதடுகள் உதிர்க்கப் போகும் வார்த்தைக்காக இருவரது மனங்களும் ஏங்கின.

"மாணவர்கள் எந்தவொரு பொறிக்குள்ளும் அகப்படாது படிக்க வேண்டும். இந்தப் படிப்பின் மூலமே நாம் பல வற்றையும் சாதிக்க முடியும். எமது உரிமைகளையும் வென்றெடுக்க முடியும்" என்று அழுத்தமாக இடித்துரைத்தார் ஆசிரியர், மாணவர்கள் மனம் புத்துயிர் பெற்று திடசங்கற்பம் பூண்டது. ஆசிரியர் சில நொடிகள் கண்களை மூடியபடி இருந்தார். பின், "கல்வியே எங்கள் மூலதனம்" என்றார். அது உதட்டில் இருந்து வெளிவந்த வார்த்தை அல்ல. அது மாணவர் களின் நாடி நரம்பெல்லாம் ஓடிப் பாய்ந்தது. மாணவர்களும் ஒரு சேர உரத்துக் கூறினர்.

"கல்வியே எங்கள் மூலதனம்"

– வலம்புரி சங்குநாதம் 02.06.2019

# கல்லாதது உலகளவு

நேரம் பிற்பகல் 3.30 ஐத் தாண்டியிருந்தது. எனினும் சூரியக் கதிர்களின் கோபக் கனல்கள் சற்றும் குறைந்ததாய்த் தெரியவில்லை.

"உந்தப் பெரிய வீட்டைக் கட்டியும் வீட்டுக்குள் இருக்க முடியலயே"

என்று தனக்குத் தானே சலித்துக்கொண்டவாறு வெளியில் நிற்கும் வேப்பமர நிழலின் கீழ் சாய்மனைக் கதிரையைப் போட்டார் ஆறுமுகத்தார். கைகளில் இருந்த அந்தப் புதினப் பத்திரிகையை உதறி விரித்தவாறு மூக்குக் கண்ணாடியின் கீழ்ப் பக்கத்தால் கண்களை இடுக்கிப் பார்த்தார். வாய்க்குள் முணுமுணுத்தவாறு வாசிக்கத் தொடங்கினார். எனினும் அவரின் மனம் பத்திரிகை வாசிப்பில் லயிக்கவில்லை. தனது நெஞ்சின் மீது பத்திரிகையைப் போட்டவாறு வேப்பமர உச்சியை வெறித்துப் பார்த்தவாறு படுத்திருந்தார். வேப்பமர உச்சியில் அணில் குஞ்சுகள் இரண்டு ஓடிப்பிடித்து விளையாடிய வண்ணம் இருந்தன.

"என்னப்பா! கப்பல் கவிழ்ந்து போச்சே, இத்தனை யோசனை"

என்றவாறு சரஸ்வதியம்மா பக்கத்தில் வந்து பாயைப் போட்டு அமர்ந்தாள். தான் கொண்டு வந்த வெற்றிலைத் தட்டத்தில் இருந்த பாக்கை பாக்குவெட்டியால் இலாவகமாக வெட்டினாள். வெற்றிலையில் சிறு அளவு சுண்ணாம்பைத் தடவி பாக்குச் சீவலை வைத்து சுற்றி கணவனுக்கு கொடுத்தாள். தானும்

சிறிதளவு போட்டுக் கொண்டாள். எப்போதாவது வாய் நமைச்சலாக இருக்கும் போது இவ்வாறு போட்டுக் கொள்வார்கள். தாம்பூலம் தரித்தல் தமிழர் பண்பாடு ஆச்சே!

ஆறுமுகத்தார் குடும்பம் அழகான சிறிய குடும்பம். ஆறுமுகம் ஓய்வு பெற்ற ஆசிரியர். சமூகத்தில் நல்ல மரியாதைக்குரியவர். சரஸ்வதி அவர் உளமறிந்து நடக்கும் நல்ல துணைவி. நாட்டுக் குழப்பங்களால் பிள்ளைகள் இரண்டையும் வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு தனிமையில் தவிப்பவர்கள். பிள்ளைகள் இருவரும் திருமணமாகி வெளிநாட்டிலேயே வசிக்கிறார்கள். எப்போதாவது வந்து போவார்கள். மற்றைய பொழுது தொலைபேசியில் கதைப்பதுண்டு.

ஆறுமுகத்தார் ஊரில் உள்ள பாடசாலை ஒன்றில் நீண்டகாலமாக கடமை யாற்றி ஓய்வு பெற்றவர். ஆறுமுகம் சேர் என்றால் பாடசாலையே நடுங்கும். அந்தளவு கண்டிப்பானவர். கனிவானவரும் கூட. மாணவர் ஒழுங்கு நடத்தைக்குப் பொறுப்பான டிசுப்பிளீன் ரீச்சர். அவர் வரலாற்றுப் பாடத்தைக் கற்பிப்பதில் கைதேர்ந்தவர். மாணவருக்கு மட்டுமல்ல ஆசிரியர்களுக்கும் அவர் முன்னுதாரணம்.

அவர் தான் இன்று தெரிந்தோ தெரியாமலோ ஓர் தவறு இழைத்துவிட்டார்.

“என்னப்பா, என்ன பிரச்சினை?” என்று மனைவி ஆறுமுகத்தாரை உலுப்பினார்.

“ஒன்றுமில்லையடியப்பா இன்று சந்தையில் ஒரு சின்ன தப்பு நடந்திட்டுது”

“என்னெண்டு சொன்னாத்தானே தெரியும்” சரஸ்வதி அவரை அவசரப் படுத்தினாள்.

ஆறுமுகத்தார் என்னென்று சொல்வதற்கு முன்பு நாம் ஒரு வருடம் பின்னோக்கிச் சென்று வருவோம்.

ஆறுமுகத்தார் எப்போது ஓய்வு பெற்றாரோ அப்போதே அவர் ஒரு வருத்தக்காரன் போல் ஆகிவிட்டார். ஒருமுறை இவரது குடும்ப வைத்தியர் “நீங்க சும்மா இருக்காதையுங்கோ” சின்னதா ஓர் வீட்டுத் தோட்டம் செய்யலாமே? என்றார். இவரது ஒய்வு தான் வருத்தம் எனப் புரிந்து கொண்டுள்ளார் வைத்தியர்.

"சுத்தமான சத்தான மரக்கறிகளை கூட பெற்றுக் கொள்ள முடியும்" என்றார்.

"என் ஐயா பெரிய தோட்டக்காரன் தெரியுமோ" என்று கூறிய வாத்தியார் தன் வீட்டிற்குப் பின்னால் இருந்த சிறு காணியில் கத்தரி, பூசணி, தக்காளி, கீரை, கொஞ்ச வாழை என்று சிறு தோட்டக் காரனாக மாறிவிட்டார். மரக்கறிகளை எல்லாம் வீட்டுத் தேவைக்கு எடுத்துக்கொ ண்டு சொந்த பந்தங்களுக்கும் கொடுத்தார்.

வாத்தியாரின் வாழைகள் எல்லாம் அந்த மாதிரிக் குலைகள் போடத் தொடங்கி விட்டன. இவர் அதனைச் சந்தைக்கு கொண்டு போகத் தயாரானார்.

சந்தைக்கு எப்படிப் போறது? வாத்தியாராகவா? இல்லை தோட்டக்காரனாகவா? சந்தைக்குத் தோட்டக்காரனா கத்தான் போகவேண்டும் என்று எண்ணிப் பழைய சாரம் மற்றும் பழைய சேட் ஒன்றை அணிந்து கொண்டு புறப்படத் தயாரானார் வாத்தியார்.

இதைப் பார்த்த சரஸ்வதி. "என்னப்பா இது என்ன கோலம். நீங்க வாத்தியார் தானே?" என்று பொரிந்து தள்ளினாள்.

"எடியப்பா, சந்தைக்குப் பின்ன என்ன பட்டுவேட்டி சேட்டுடனா போவாங்கள்

"அதுக்கு உந்த ஊத்த உடுப்புடனே? ஊத்த வாத்தியார் என்று தான் சொல்லுவாங்கள்"

சரஸ்வதி விட்டபாடில்லை.

இறுதியில் சுமாரான சேட்டும் நீளக் காற்சட்டையும் அணிந்து சந்தைக்குச் சென்றார் வாத்தியார்.

"மாஸ்ரர் வாங்கோ ... வாங்கோ ... எனக்குத்தான் வாழைக்குலை" என்று ஓடிவந்தான் ஓர் இளம் வியாபாரி. பதினெட்டு அல்லது பத்தொன்பது வயது இருக்கலாம்.

"என்னடா இவன் மாஸ்ரர் என்கிறானே... என்னட்ட படிச்சிருப்பானோ?" என்று எண்ணுவதற்குள் இவரது சைக்கிளை நிறுத்தித் தானே வாழைக்குலையையும் இறக்கி வைத்தான். இங்கும் பண்பானவர்கள் உதவிசெய்யும் மனப்பான்மை

கொண்டவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்.

முகத்தாருக்கு புல்லரித்தது.

"வாங்கோ மாஸ்ரர் நிறுப்பம்" என்று அவரின் சொல்லுக்கு காத்திராது தராசு இருக்கும் இடம் தூக்கிச் சென்று நிறுத்தான். வாத்தியார் மகுடிக்குக் கட்டுப்பட்ட பாம்புபோல் அவனின்பின் சென்றார்.

"கழிவுநீக்கி 20 கிலோ. இந்தாங்கோ மாஸ்ரர் 600 ரூபா. வாத்தியார் விக்கித்து நின்றார்.

நேற்றுத்தான் மனைவிக்கு கோயில் அர்ச்சனைக்கு ஒரு கிலோ 80 இற்கு வாங்கியவர். வரும் போது மனக்கணக்கில் ஒரு கிலோ 60 ரூபா படி 1200 இற்கு கணக்குப் போட்டவர்.

"நாராயணா... நாராயணா..." என்றான் பக்கத்தில் நின்ற வியாபாரி.

தனக்கு நாமம் போடப்பட்டதை உணர்ந்தார் ஆறுமுகத்தார்.

இதற்கிடையில் அந்த வியாபாரி இன்னொரு தோட்டக் காரனிடம் பேரம் பேசிக் கொண்டிருந்தான். அவன் தலையிலும் நாமம் போடுவானோ என்று ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தார் வாத்தியார்.

சிறிது நேரம் கழித்து அந்தத் தோட்டக்காரனிடம் "என்ன விலைக்குக் கொடுத்தீர்கள்"

" ஒரு கிலோ 50 ரூபா என்று கூறி அப்பாற் சென்றான் தோட்டக்காரன்.

வாத்தியார் மனமுடைந்து நின்றார். உள்ளம் "பகற் கொள்ளை" என்று ஊளையிட்டது. பெரிய பட்டப்படிப்பு எல்லாம் படிச்சும் எத்தனை மாணவரைக் கட்டுப்படுத்தி வைத்திருந்த என்னைச் சொற்ப நேரத்தில் ஏமாற்றிவிட்டானே என்று மனம்வெம்பினார்.

இதனை அவர் மனைவியிடம் இருந்து மறைத்திருந்தார். ஒரு வியாபாரியிடம் தாம் ஏமாந்ததை மனைவியிடம் சொல்ல அவர் மனம் விரும்பவில்லை. அதனை முழுமையாக இருட்டடிப்புச் செய்திருந்தார்.

இது நடந்து ஒரு மாதம் இருக்கும். இன்று மீண்டும்

சந்தைக்குப் போக ஆயத்தமானார். போகும் போதே சில உறுதி யான முடிவுகளை எடுத்துச் சென்றார். இன்றும் அவன் தான்.

"மாஸ்ரரின்ர வாழைக்குலை எனக்குத் தான்" என்று ஓடிவந்து சைக்கிளைப் பிடித்தான்.

"விலையைச் சொல்லிற்றுப் பொருளை எடு" கறாராக நின்றார்.

"என்ன மாஸ்ரர் நாங்க இப்படியா பழகினம்"

வெற்றிலைக்கறை கொண்ட பற்களைக் காட்டிச் சிரித்தான். சடடென்று குனிந்து வாழைக்குலையைத் தூக்கிச் சென்று நிறுத்தான். பக்கத்தில் நின்ற வியாபாரி ஐந்து விரல்களைக் காட்டினான். உடனே ஆறுமுகத்தார் "கிலோ ஐம்பது ரூபாய்" என்று கத்தினார்.

"உவங்கள் இப்படித்தான் குழப்பு வாங்க. வைக்கோல் பட்டடை நாய்கள்" என்று கத்தினான் காவி தெரிய அவன்.

26 கிலோ. மூன்று கழிவு. 23 கிலோ. 40 ரூபாய் படி 920 ரூபாய்.

காசை நீட்டினான். புதிய ஐந்நூறு ரூபா தாள் உள்ளடங்கலாக இருந்தது.

நாராயணா... நாராயணா... என் இப்போதும் அந்த வியாபாரி குரல் கொடுத்தான். தனக்கு இன்றும் நாமம் போடப் பட்டதை உணர்ந்தவாறு மரக்கறிச் சந்தையை நோக்கிச் சென்றார் வாத்தியார். வழியில் கிலோ 100 ரூபாய் வாழைப் பழம் விற்பதை எண்ணிப் பெருமூச்சு ஒன்றை விட்டார்.

என்னதான் பெரிய படிப்பு எல்லாம் படிச்சாலும் இந்த உலகத்தில் தான் கற்க வேண்டியது நிறைய இருக்கு என அனுபவத்தில் புரிந்து கொண்டார். மரக்கறிகளை வாங்கிய பின் பணத்தைக் கொடுக்க முயன்றார். என்ன ஆச்சரியம். இரண்டு புதிய 500 ரூபா தாள்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டியவாறு இருந்தன. அது வியாபாரி தந்த காசு. மனதில் சந்தோச இழையோடியது. இது எனக்குரிய காசுதான். கடவுள் அதைத் திருப்பித் தந்துவிட்டார். மரக்கறிக் காசைக் கொடுத்துவிட்டு வீடு திரும்பினார். எனினும் அவர் மனதை என்னமோ உறுத்தியது.

"இது ஒரு பகற்கொள்ளை" என ஆழ் மனம் ஊளை யிட்டது.

ஆறுமுகத்தாரின் மனக்குழப்பத்தை அறிந்த சரஸ்வதி யம்மா

"என்ன செய்வதாய் உத்தேசம்".

சிறிது நேர யோசனைக் குப் பின்,

"நாளைக்கு சந்தைக்குப் போய் கொடுக்கப் போறன்"

"இன்றே கொடுத்திருக்கலாமே?"

அவன் மீதுள்ள கோபம் அப்போ தடுத்தது.

"இப்ப கோபம் இல்லையா?"

"இல்லை. இது வியாபாரம். அங்கு வாயும் வல்லமையும் உள்ளவன்தான் முன்னுக்கு வரலாம்"

விரிவுரைப் பாணியில் மேலும் தொடர்ந்தார் ஆறுமுகத்தார்.

"சிலர் வெள்ளையும் சொள்ளையுமாக ஏசி அறையில் இருந்து கொண்டு மக்களின் பணத்தை கோடிக்கணக்கில் சூறை யாடுறாங்க. அவங்க மத்தியில் இவங்க எவ்வளவோ மேல்..."

ஆறுமுகத்தாரின் மனம் குழம்பிய குட்டை தெளிவது போல் தெளிவுக்கு வந்தது. பாறாங்கல் போல அழுத்திய மனப்பாரம் குறைந்தது. அவர் மனம் பஞ்சாய்ப் பறப்பது போல் உணர்ந்தார்.

– வலம்புரி சங்குநாதம் 24.03.2019

# தக்கண பிழைக்கும்

பொழுது புலர்ந்தும் புலராதது போல் இருந்தது. சூரியக் கதிர்கள் பூமியைத் தொடாத வண்ணம் கருமேகக் கூட்டங்கள் வானத்தை ஆக்கிரமித்திருந்தன. பெருங்காற்று குளிருடன் வீசியது. மரங்கள் ஈடுகொடுக்க முடியாது வளைந்து ஆடின. சருகுகள் பறந்தன.

அந்த ஓலைக்குடிசைக்குள் இருந்து வெளியே வந்த பொன்னி வானத்தை அண்ணாந்து பார்த்தாள். "அடக் கடவுளே... மழை கட லென வரப்போகுதே" என்றவாறு உடலை சிலிர்த்துக் கொண்டாள். அருகில் இருந்த தென்னையில் இருந்து ஓலை ஒன்று விழுந்தது.

"இந்த மழைக்கு என்ர குடிசை தாங்காது" என்று முணுமுணுத்தவாறு குடிசைக்குள் சென்றாள். கத்தி ஒன்றை எடுத்து வந்து ஓலைகளை வெட்டி கூரை மேல் பரப்பினாள்.

"பொன்னி"

இந்தக் கிராமத்தில் அவளைத் தெரியாத வர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். திருமண வைபவம் தொடக்கம் மரணச்சடங்கு வரை எல்லா இடத்திலும் அவள் இருப்பாள்.

குசினிதான் அவள் சாம்ராஜ்ஜியம். சிட்டெறும்பு போல் சுறுசுறுப்பாய் அவள் இயங்குவாள். உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் அவளுக்கு ஒருபோதும் கிடைப்பதில்லை. கணக்கு மட்டுமல்ல கையெழுத்துக் கூடப் போடத் தெரியாதவள்.

"பொன்னி... பொன்னி... என்று கூப்பிட்ட குரல் கேட்டு திரும்பிப் பார்த்தாள். படலையடியில் சங்கரப்பிள்ளை வாத்தி

யார் நின்றிருந்தார்.

"சொல்லுங்கோ ஐயா" என்று அருகில் சென்றாள்.

"கம்பரெலியத் திட்டத்தின்கீழ் எங்கட ஒழுங்கைக்கு றோட்டுப் போடப் போறாங்கள்"

அரைகுறையாக புரிந்த பொன்னி தலையைச் சொறிந்தாள்.

"அதுக்கு என்னையா?"

"மினிஸ்டர் இன்டைக்கு அடிக்கல் நாட்ட வாறார்"

"இண்டைக்கா?"

"ஓமடி புள்ள. நீ பின்னேரம் வீட்டுப் பக்கம் வா"

"ஏனங்கோ"

"தேத்தண்ணி போடணும்"

"உங்க வீட்டையும் வாறாங்களா?"

"அவர் என்ர பழைய சிநேகிதன்". இதைச் சொல்லும் போது வாத்தியாரின் முகத்தில் பெருமிதம் தெரிந்தது. இதைக்கேட்டதும் பொன்னியின் முகம் பிரகாசமானது.

"ஐயா வீட்டுத் திட்டம் எனக்குப் பாஸ் பண்ணி இருக்கு என்கிறாங்க ஆனா... இன்னும் காசு வந்து சேரல. என்ர பெரிய பொண்ணு பெரிய படிப்பெல்லாம் படிச்சிருக்கா. மினிஸ்டர் ஐயாட்டச் சொல்லி அவளுக்கு ஒரு வேலை வாங்கிக் குடுங்கோ ஐயா..." மன்றாட்டமாய் கேட்டாள் பொன்னி.

"அவளின்ர விபரங்களை பின்னேரம் கொண்டு வா... பாப்பம்" என்று கூறிச் சென்றார் சங்கரப் பிள்ளை வாத்தியார்.

பொன்னி மலையகத்தில் பிறந்தவள். கஷ்டத்தின் காரணத்தினால் அவளை வெறும் ஐந்நூறு ரூபாய்க்கு அவள் பெற்றோர் விற்று விட்டனர்.

அன்றிலிருந்து யாழ்ப்பாணம் தான் அவளின் புகலிடம் மட்டுமல்ல புகுந்த இடமும் கூட. இவ்வூரின் சிங்கப்பூர் பென்சனியர் ஆறுமுகம் குடும்பம்தான் அவளை வாங்கியவர்கள், ஆறுமுகத்தார் வீட்டில் தான் பொன்னியின் காலம் கரைந்தோடியது.

1990களில் பொன்னியைத் தேடிக் கொண்டு வந்த மச்சான் முறையான வேலனுக்கு இவளைத் திருமணம் செய்து

வைத்து விட்டார்கள். அன்றிலிருந்து இருவரும் அந்த வீட்டிற்காக மாடாய் உழைத்தனர்.

ஆறுமுகத்தாருக்குச் சொந்தமான தென்னந்தோப்பு ஒன்றினுள் இவர்களுக்கு குடிசை ஒன்று போட்டுக் கொடுக்கப் பட்டது. அன்றிலிருந்து அவன் தென்னந்தோப்புக்கு காவற் காரன். இவள் அவர்களின் வீட்டிற்கு வேலைக்காரி.

ஒருமுறை வேலன் சம்பளத்தைப் பற்றிக் கதைத்தபோது "தின்கிறதுக்கு சோறு, உடுத்துக்க உடுப்பு. படுக்கிறதுக்கு ஒரு குடிசை இவ்வளவும் யார் தாறது" என்று ஓர் தலையடி போட்டு மடக்கிப் போட்டா ஆறுமுகத்தாரின் மனைவி மணியக்கா.

சிறிது காலத்தின் பின் ஆறுமுகத் தாரும் பின் அவர் மனைவியும் இறந்துபோக பொன்னி குடும்பம் நிர்க்கதியாகி விட்டது. அமெரிக்காவில் இருந்து வந்த ஆறுமுகத்தாரின் பிள்ளைகள் தென்னந்தோப்புக்களை விற்பதற்கு நாட்குறித்துச் சென்றுவிட, இவர்கள் கதி அதோ கதியாகி விட்டது.

வயதுக்கு வந்த இரண்டு பெண் பிள்ளைகளையும் குடிகாரக் கணவனை நம்பி எங்கே அவள் கொண்டு செல்வாள்?

வடக்குப் பக்கமாக இருந்து "சோ" என்ற பேரிரைச்ச லுடன் மழை பொழியத் தொடங்கியது. ஓட்டமாக குடிசைக்குள் சென்ற பொன்னி ஒழுக்கு விழும் இடம் பார்த்து பாத்திரங்களை எடுத்து வைத்தாள்.

மாலை 5.30 மணியளவில் அடிக்கல் நாட்டும் வைபவம் முடித்து மூன்று வாகனங்களில் சுமார் பதினைந்து பேர் வாத்தியார் வீட்டிற்கு வந்தனர். வாத்தியாருக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. பொன்னி பம்பரமாக இயங்கினாள். சுடச்சுட வடை, தேநீர் என்பன பரிமாறப்பட்டன.

வடை, தேநீருக்குப் பெரும் புகழா ரம் பாடப்பட்டது. அதைத் தானே செய்தது போல ஏற்றுக் கொண்டாள் வாத்தி யாரின் மனைவி. பொன்னி குசினுக்குள் நின்று எட்டி எட்டிப் பார்த்தாள். யாரும் அவளை கண்டுக்கவே இல்லை.

இறுதியில் அமைச்சர் புறப்படும் போது வாத்தியார் மஞ்சள் கவரிட்ட விண்ணப்பம் ஒன்றை அவர் கையில் திணித்தார். அதனை அமைச்சர் தன் உதவியாளரிடம் கொடுத்து

விடைபெற்றுச் சென்றார். அவசரமாக வாத்தியாரின் மனைவி வடைப்பார்சல் ஒன்றையும் கொடுத்து அனுப்பினார்.

பொன்னிக்கு அளவில்லா ஆனந்தம். தான் கொண்டு வந்த வேலைக்கான விண்ணப்பத்தை வாத்தியார் கொடுத்ததைப் பார்த்திருந்தாள். அவள் கண்கள் நனைந்தன.

சங்கரப்பிள்ளை வாத்தியாரைக் கையெடுத்துக் கும்பிட்டாள். அவள் கைகளுக்குள் நூறு ரூபாயைத் திணித்தார் வாத்தியார்.

“இதை வாங்கினால் நான் நன்றி கெட்டவள் ஆயிடுவன்” என்று காசைப் பெறாது விருட்டென்று வீதி யில் இறங்கி நடந்தாள் பொன்னி.

அவள் போனதும் வாத்தியார் மேசை விரிப்பின் கீழிருந்து அந்த மஞ்சள் கவரை எடுத்துச் சுக்கு நூறாகக் கிழித்து குப்பைக் கூடைக்குள் போட்டார்.

“இனி எப்படியும் என் மகனுக்கு வங்கியில் வேலை கிடைக்கும்” என முணுமுணுத்தவாறு சாய்மனைக் கதிரைக்குள் சாய்ந்தார்.

அமைச்சரின் சொகுசு வாகனம் முப்பது நிமிடங்கள் ஓடியிருக்கும். முன் இருக்கையில் அமர்ந்திருந்த அமைச்சரைப் பார்த்து “ஐயா வடை சாப்பிடுங்களன். இன்னும் சூடாய் இருக்கு” என்றார் பின்னால் இருந்த உதவியாளர்.

“எண்ணெயை ஒத்தி விட்டுத் தாரும்” என்றார் அமைச்சர்.

அவரின் கொலஸ்ட்ரோலை உணர்ந்த உதவியாளர் மெல்ல சங்கரப் பிள்ளை வாத்தியாரின் மஞ்சள் கவரை எடுத்து அவரின் மகனின் வேலை விண்ணப்பத்தைக் கிழித்து எண்ணெயைப் பதமாக ஒற்றி எடுத்தார்.

“எல்லோரும் வேலைக்கு மனுக் கொடுத்தால் எங்கட குடும்பத்திற்கு யார் வேலை கொடுக்கிறது?” என்ற மனக்குமுறல் அடங்கியது. வடையை நீட்டினார் உதவியாளர். அமைச்சர் அதனைப் பெற்றுச் சப்புக் கொட்டியவாறு சாப்பிடத் தொடங்கினார்.

- வலம்புரி சங்குநாதம் 06.10.2019

# விட்டில் பூச்சிகள்

யுத்தத்தின் வடுக்கள் மாறாத அந்தக் கிராமத்தில் இன்னமும் மினசாரம் இல்லாத வீடுக்கள் இருக்கத்தான் செய்கின்றன. காடுகளாக மண்டிக் கிடந்த அந்தக் கிராமம்" வயலும் வயல் சார்ந்த பிரதேசங்களாக மாறிக் கொண்டு வருகின்றது. அவ்வப்போது வாக்குப் பிச்சை கேட்டு, அவ்வூரின் செம்மண் புழுதியை உழுது வரும். அரசியல் முதலைகளின் வாகனங்கள் மழைகாலங்களில் அப்பக்கம் தலைகாட்டுவதே இல்லை. "றோட்டுப் போடுவோம், கரண்ட தருவோம்" என்றெல்லாம் பொய்களால் வாக்கு வங்கியை நிரப்பிக் கொண்டவர்கள். இனி அவர்கள் அடுத்த தேர்தல் காலத்தில் தான் வருவார்கள். அடிப்படை வசதிகளைக் கூட பெற்றுத் தர முடியாதவர்கள். இவர்கள் எப்படி தாய் நாட்டைப் பெற்றுத் தருவார்கள். தேசியம் பேசியே அரசியல் பிழைப்பு நடாத்தும் நலிவடைந்த அரசியல்வாதிகள் அவர்கள். இப்படித்தான் அங்குள்ள மக்கள் தமது ஆற்றாமையை வெளிப்படுத்துவார்கள்.

அந்திசாயும் நேரம். சூரியன் வன்னிக் காட்டிற்குள் மறையத்தொடங்குகின்றான்.

"அமுதா... அமுதா... மேய்ச்சலால் மாடுகள் வந்திட்டுது புள்ள"

அமுதா எழுந்து சென்று வேலியின் குறுக்காகப் போடப்பட்ட தடுப்பை எடுத்து விட்டாள்.

ஒழுங்கைக்குள் நின்ற மாடுகள் வரிசையாக உள்ளே வந்து வீட்டின் பின்னால் கட்டப்பட்டிருந்த அடைப்புக்குள் சென்றன.

அவள் ஒன்று... இரண்டு என்று எண்ணத் தொடங்கினாள். பதின்னான்கு என்று கூறி முடித்தாள்.

"எல்லாம் வந்து அடைஞ்சிட்டுது அம்மா" என்றாள்.

இவள் கை, கால், முகம் கழுவி சாமிப் பட விளக்கேற்ற அருணும் ஆர்த்தியும் விளையாடி முடித்து வந்திருந்தனர்.

"இந்தாக்கா உன்ர போன். சார்ஜ் போட்டாச்சாம். கடைக்கார மாமா தந்தவர்" என்றான் அருண்.

அந்தக் கடையில் சூரிய மின்கலம் மூலம் சார்ஜ் ஏற்றிக்கொடுப்பது வழமை. அதற்கு சிறு தொகைப் பணத்தை இவர்கள் வழங்குவதும் உண்டு.

அரிக்கன் லாம்பின் சிமினியை திருநீறு போட்டு சுத்தம் செய்தாள் அமுதா. அது பளிச்சென்றிருந்தது. அதனை ஒளி யேற்றி சிறியவர் படிக்கக் கொடுத்தாள். தாய்க்குப்பக்கத் தில் கைவிளக்கு ஒன்றை வைத்தாள்.

பின் மெழுகுதிரி வெளிச்சத்துடன் குசினிக்குள் இரவுச் சாப்பாட்டைத் தயாரிக்கத் தொடங்கினாள் அமுதா. அவள் அழகானவள். போன வருடம் தான் அவள் இருபத்தொரு வயதைப் பூர்த்தி செய்திருந்தாள். சிறுவயதிலேயே இந்தக் குடும்பத்தை அவள் சுமக்கிறாள். இறுதி யுத்தத்தில் எறிகணை யால் அப்பாவை இழந்தது மட்டுமல்ல அம்மாவும் நோயாளி ஆகிவிட்டாள். முள்ளந்தண்டு பாதிப்பு. சொந்தங்களின் உதவி யுடன் உயர்தரம் வரை படித்து இப்போது குடும்பத்திற்காக உழைக்கிறாள்.

"கண்ணான கண்ணே... கண்ணான கண்ணே ... என் மீது சாய வா..." என்று அவளது கைபேசி அழைத்தது. அவளுக்கு மிகவும் பிடித்தமான பாடலை "றிங்கிங் ரோன்" ஆக விட்டிருந்தாள். கைபேசியை கையில் எடுத்துக் கதைத்தவளை "யாரம்மா போனில்" என்றாள் தாய்.

"சங்கத் தலைவி எடுத்தவா... தொழில் அதிபர் ஒருவர் கனடாவில் இருந்து வாறாராம். அவர் எங்கட கிராமத்திற்கு உதவி செய்யப்போறாராம். நாளைக்கு கட்டாயம் கூட்டத்திற்கு வரட்டாம்" என்று கூறி முடித்தாள்.

"நல்லது மறக்காம போ புள்ள" என்றாள் தாய்.

அமுதா மாதர் சங்கத்தில்தான் தையல் பழகியவள். அங்கு மாணிய அடிப்படையில் வழங்கப்பட்ட தையல் இயந்திரத்தைக் கொண்டுதான் அவர்கள் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந் தார்கள்.

மறுநாள் மாலை அந்தக் கிராமத்தின் மத்தியில் உள்ள மாதர் சங்கக் கட்டடத்தில் பெண்கள் பலர் வந்திருந்தனர். அதில் விதவைப் பெண்கள், காணாமல் ஆக் கப்பட்ட கணவன்மாரைக் கொண்ட பெண்கள். வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பெண்கள் எனப் பலர் வந்திருந்தனர். அவர்களில் அமுதாவும் இருந்தாள். அக்கூட்டத்தில் வயது குறைந்தவள் அவளே. சிறிது நேரத்தின் பின் மாதர் சங்கக் கட்டடத்தின் முன் கார் ஒன்று சத்தம் இல்லாது வந்து நின்றது. அவர் உள்ளே வரும் போது எல்லோரும் எழுந்து நின்று வரவேற்றனர். அவர் எல்லாரையும் அமரச் சொல்லி தானும் கதிரையில் அமராது பாயில் உட்கார்ந்தார்.

எல்லோர் மனங்களையும் ஒரு நொடிப் பொழுதில் அவர் வென்றுவிட்டார், அமுதா விற்கு அவர்மீது மதிப்பு மேலிட்டது. அவர் எல்லோரது நிலைமைகளையும் கேட்டறிந்தார், பின் அக்கூட்டத்தின் மீது பார்வையைச் செலுத்தியவர் அமுதாவைக் கையைக் காட்டி அழைத்தார்.

"எல்லோரது விபரங்களையும் சேகரித்து நீர்தான் எனக்குத் தரவேண்டும்"

"ஓம் அங்கிள்"

"அங்கிள் என்று கூறும் அளவுக்கு நான் ஒன்றும் வயதானவன் அல்ல" என்று கூறிச் சிரித்தார். எல்லோரும் சிரித்தனர், தான் கொண்டு வந்த புத்தகப் பைகளை ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொடுத்தார். அதனுள் கொப்பிகள். பேனா, பென்சில், கலர் சோக் என மாணவர் கற்றல் உபகரணங்கள் காணப்பட்டன. இறுதியாக மாதர் சங்கத்தின் செயலாளர் நன்றியுரை நிகழ்த்தினார்.

அப்போதுதான் அவரது பெயர் பூவரசன் என்பது தெரிந்தது. எல்லோரும் அவரை பூவண்ணன் என்று அழைத் தனர். இறுதியில் அவர் அமுதாவிடம் தொடர்புகொள்ளவென அவளது கைத்தொலைபேசி இலக்கத்தை வாங்கிச் சென்றார்.

ஊரில் சிலருக்கு உதவி செய்ய முன்வந்துள்ளார் என மாதர் சங்கத் தலைவி அமுதாவிற்குச் சொன்னார். முதல் பத்துக் குடும்பங் களின் பெயர்கள் திரட்டப்பட்டன. அதில் அமுதாவின் குடும்பம் பத்தாவது ஆகும்.

உதவிகோரும் குடும்பங்களின் பெயர் விபரங்களை பெற வருவதாகக் கூறினார் பூவண்ணன். அன்றைய தினம் முற்பகல் 10.30 மணியளவில் பூவரசன் அவர்கள் வீட்டு வாசலில் நின்றிருந்தார். ஒரு கையில் பை நிறைய அப்பிள்களும் மற்றையதில் வெளிநாட்டுச் சொக்லேட்டுக்களும் கொண்டு வந்தார். அனைவருக்கும் திகைப்பாக இருந்தது. நேரே தாயின் கட்டில் அருகே சென்று ஓரமாக அமர்ந்தார்.

"என்ன மாதிரியம்மா இப்போ உங்களுக்கு?"

"ஏதோ இருக்கிறன் தம்பி, இந்தப் பிள்ளைகளால் தான் எனக்கு யோசனை"

"நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படா தையுங்கோ . இனி நானும் இந்தக் குடும்பத்தில் ஒருவன்தான்" என்று கூறியவாறு தாயின் கையில் ஐயாயிரம் ரூபா தாள் ஒன்றைத் திணித்தார்.

தாயின் கண்கள் நன்றியுணர்வால் நனைந்தன. கைகளைக் கூப்பினாள். அவசரமாக கைகளைப் பிடித்துக்கொண்டார்.

"நான் ஒன்றும் கடவுள் இல்லை. நானும் சராசரி மனிதன்தான்" என்றார் எளிமையாக. எல்லாவற்றையும் கவனித்தவாறு அவசர அவசரமாக தேநீர் போட்டுக் கொண்டு வந்தாள் அமுதா. அவர் தேநீரை ருசித்துக்குடித்தார்.

"ஆஹா... அருமை... இந்தக் கைகளுக்கு மோதிரம் போட வேண்டும்" என்றார் பூவவரசன். அமுதாவிற்கு உற்சாகம் பிறந்தது. ஓடிச்சென்று உதவிக்கான குடும்பங்களின் விபரங் களைக் கொண்டு வந்து கொடுத்தாள். இறுதியாக அவர் விடை பெற்றுச் செல்லும் போது அமுதாவின் கையில் சிறிய பொதி ஒன்றைக் கொடுத்துச் சென்றார்.

அவரது கார் சென்று மறைந்ததும் அவசரமாக அப்பொதியைப் பிரித்தாள் அமுதா. அவள் கண்களையே நம்ப முடியவில்லை. ஸ்மார்ட் போன்".

அவளுக்கு சொல்ல முடியாதளவு ஆனந்தம். அமுதா

குடும்பத்திற்கு பூவண்ணன் ஓர் அவதார புருஷனாகத் தோன்றினார். உடனடியாகவே தனது சிம்மைக் கழட்டி புதிய கைபேசிக்குப் போட்டாள், அந்த நேரம் பார்த்து புதிய கைபேசிக்கு அழைப்பு வந்தது. மறுமுனையில் பூவண்ணன்.

"சந்தோஷமா"

"ஓம். ரொம்ப சந்தோஷம்"

"ஆனால் ஏன் எனக்கு இது?"

"நீர் தான் என் செக்ரட்ரி. எனக்காக தகவல் சேகரித்துத் தரவேண்டும்" என்று கூறிச்சிரித்தார்.

இவளும் சிரித்தாள்.

பூவண்ணன் ஆறுமாதம் கனடா, பின் ஆறுமாதம் இலங்கை என்று சுற்றித் திரிபவர். இரண்டு கல்யாண மண்டபங்கள் இங்கு உண்டு. அதைவிட கனடாவில் பல கடைத்தொகுதிகள் என ஏராளம் சொத்துக்கள்.

"ஒருவர் உழைத்து இவ்வளவு சொத்துக்களையும் வாங்க முடியுமே புள்ள" என்று தாய் தன் ஆதங்கத்தைக் கேட்டு விட்டாள்.

"எனக்கெப்படித் தெரியும்" என்றாள் அமுதா.

ஓர்நாள் அமுதாவின் கைபேசிக்கு அழைப்பு வந்தது. பூவண்ணன் தான் கனடாவில் இருந்து பேசினார். மூன்று மாதத்தில் திரும்பி வருவதாக கூறினார், தாயுடனும் கதைத்தார், அவர் இக்குடும்பத்துடன் மிகவும் ஐக்கியமாகிவிட்டார்.

சில மாதங்கள் ஓடியிருக்கும். பூவண்ணன் அமுதா வீட்டிற்கு வந்திறங்கினார். பை நிறைய வெளிநாட்டுப் பொருட்கள், சொக்லேட்டுக்கள் கொண்டு வந்தார். வழமை போல் அமுதா போட்ட தேநீரைச் சுவைத்துக் குடித்தார்.

"அமுதாவை வேலை விடயமாக வெளியே கூட்டிச் செல்லலாமா?" எனத் தாயிடம் கேட்டார்.

"எங்கே?" என்றாள் தாய்.

"என் வீட்டிற்குத்தான். கொம்பியூட்டரில் கொஞ்சம் ரைப் பண்ணவேண்டும்"

"கவனமாய் கூட்டிற்று போய் கொண்டு வந்து விடுங்கோ" என்றாள் தாய்.

அமுதா குழப்பமான மனநிலையுடன் அந்தக்காரில் ஏறினாள். பின் இருக்கையில் அவள் அமரச் சென்றபோது முன்னே கூப்பிட்டு அமர்த்தினார் பூவண்ணன். ரம்மியமான வாசனை உள்ளே வீசியது. காரின் ஏசி குளுகுளுவென்றிருந்தது.

இனிமையான பாடல் ஒலித்தது. காதல் ரசம் மிகுந்த பாடல்களாக அவை இருந்தன. பிரதான வீதிக்கு வந்ததும் வழுக்கியது போல் அது பயணித்தது. எதையுமே ரசிக்கும் மனநிலையில் அவள் இல்லை. அவள் மனதில் பயம் குடிகொண்டிருந்தது.

பூவண்ணனின் வீடு வந்தது. இல்லை மாளிகை என்று தான் சொல்ல வேண்டும். வேலையாள் ஓடிவந்து கேற்றைத் திறந்து விட்டான். அமுதாவை அவன் ஏளனத்துடன் பார்த்துச் சிரிப்பது போல் இருந்தது.

ஹோலில் இருந்த சோபா செற்றியில் அவள் அமர்ந்தாள். உயர்ரக அந்தச் சொகுசுக் கதிரை அவளை இதமாகத்தாங்கி நின்றது.

"நானும் ராமுவும்தான் இந்த வீட்டில். அவன் எல்லா வேலையும் செய்வான். சமையலும் அவன்தான்.

குளிர்சாதனப் பெட்டியில் இருந்து சொக் லேட், குளிர்பானம் என்பவற்றை எடுத்துக் கொடுத்தான்.

"இதைச்சாப்பிடும் அமுதா. ஐந்து நிமிடத்தில் குளிச்சிட்டுவாறன்"

"கொம்பியூட்டரில் என்ன ரைப் பண்ண வேண்டும்"

"ஒரு அவசரமும் இல்லை. இப்ப ரிங்கை குடியும்" என்றவாறு விரைந்து சென்றார்.

மெல்ல சொக்லேட்டை எடுத்துச் சுவைத்தாள். பின் குளிர்பானத்தை அருந்தினாள். மெல்ல மெல்ல தலைக்குள் ஏதோ செய்தது. அந்தரத்தில் பறப்பது போன்ற பிரமை.

பிற்பகல் *3.30* மணி. அமுதா கண் விழித்துப் பார்த்த போது அவள் கட்டிலில் அலங்கோலமாக தான் படுத்திருப் பதை உணர்ந்தாள். விருட்டென்று எழுந்து உட்கார்ந்தாள். கால் மாட்டில் பூவண்ணன் உயர் ரக சிகரெட் ஒன்றைப் பிடித்தவாறு யாருடனோ கைபேசியில் கதைத்துக் கொண்டிருந்தார்.

இடையிடையே மேசை மீதிருந்த கண்ணாடிக் குவளையில் ஊற்றி வைத்திருந்த தங்க நிறத்திலான பானத்தையும் அருந்திக் கொண்டிருந்தார்.

அமுதா விழித்துக்கொண்டதும் விஸ்கியுடன் இருந்த கிளாசை தூக்கிப்பிடித்து சிரித்தார். அமுதாவிற்கு அவர் முகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை. பட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

உடம்பு அடித்துப்போட்ட மாதிரி வலித்தது. தன் பெண்மை சூறையாடப்பட்டதை அவள் உணர்ந்துகொண்டாள். அவள் மனமோ ஓலமிட்டு அழுதது. கண்ணீர் பெருகியது. இவளது அழுகையைப் பார்த்த பூவண் ணன் தனது கைபேசி உரையாடலை நிறுத்தினார்.

அலுமாரியில் இருந்து ஓர் ஆயிரம் ரூபா தாள் கொண்ட கட்டு ஒன்றை எடுத்து அவள் மடியில் போட்டார். அதை அவள் அதே வேகத்துடன் அவர் முகத்தில் விட்டெறிந்தாள். அத்தாள்கள் அவ் அறையெங்கும் பரவிப் பறந்தன.

“நான் வீட்ட போகனும்” என்றாள் விறைப்பாக. அவள் கோபத்தைப் புரிந்தவராக சில நிமிடத்தில் தயாரானார் பூவண்ணன். காரின் பின் இருக்கையில் அமர்ந்து கொண்டாள் அமுதா. இப்போதும் அந்த வேலையாள் ஏளனமாகச் சிரிப்பது போல் உணர்ந்தாள். ஆயிரம் ஈட்டிகள் கொண்டு குத்துவது போல் அவமானத்தை உணர்ந்தாள். வீட்டு வாசலில் கார் நின்றது. இறங்கினாள். கார்க்கதவை அறைந்து சாத்தினாள். பூவண்ணன் கன்னத்தில் அறைந்து போல் இருந்தது.

“அமுதா” என்றழைத்தார் பூவண்ணன். வேகமாக வீட்டிற்குள் ஓடி மறைந்தாள் அமுதா. பின் இருக்கையில் அவர் கொடுத்த “ஸ்மார்ட் போன்” அநாதரவாக இருந்தது. அதைக் கைகளில் எடுத்தார். அதில் உதவி பெறுவோர் விபரம் இருந்தது. அதனை ஆராய்ந்தார். பெயர் கனிமொழி. வயது 33. விதவை. என்றிருந்தது. அவர் உதடுகளில் நளினமாக புன்னகை தவழ்ந்தது.

– வலம்புரி சங்குநாதம் – 11.08.2019



சிவப்புக்கோடு முதல் விட்டில் பூச்சிகள் ஈறாகப் பன்னிரண்டு சிறுகதைகள் அடங்கிய இத்தொகுதி பல்வேறு கால சூழ்நிலைகளில் நாம் பட்ட இடர்பாடுகளையும் சவால்களையும் சுட்டிக்காட்டுவது மட்டுமன்றி அவை எவ்வாறு எதிர் கொள்ளப்பட்டன; சமாளிக்கப் பட்டன என்பதனையும் சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. இத் தொகுதியானது சிறீரங்கன் அவர்களுக்கு சமூகத்தின் மீதுள்ள அக்கறையை எடுத்துக் காட்டுவதுடன் அவரது எழுத்தாற்றலையும் கற்பனை உணர்வையும் புலப்படுத்தி நிற்கின்றது.

– பேராசிரியர் தி. வேல்நம்பி

உயர்தர கணக்கீட்டு ஆசிரியராக யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கடமையாற்றும் சி.சிறீரங்கன் அவர்கள் எமது சமூகத்தில் நடக்கின்ற அநீதிகளைக் கண்டு மனம் வெதும்பி அவற்றுக்கெதிரான குரலை இத்தொகுப்பில் உள்ள சிறுகதைகள் வாயிலாக முன் வைத்துள்ளார். இலகுவான மொழிநடையில் மக்கள் பயன்பாட்டிற்கு உகந்த கதைகளைப் படைத்துள்ள கதாசிரியர் பாராட்டிற்குரியவர். மேலும் தொடர்ச்சியான எழுத்து செயற்பாட்டின் மூலம் இவரது படைப்புகள் மேலும் செழுமை அடையும் என்ற நம்பிக்கையை இத்தொகுப்பு தருகின்றது.

– க.பரணீதரன்

ISBN 978-955-0958-19-1